# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 34 | ஜுலை-17-1968 | பக்கங்கள் 12 | விலை சதம் 15



அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக
வியட்நாம் மக்கள் நடத்தும் வீரமிக்கப் போராட்டத்தை ஆதரித்து



மாபெரும் கூட்டம்

இடம்:- செஞ்சிலுவை சங்க மண்டபம்
காலம்:- 20-7-68 மாலை 5 மணி

பேச்சாளர்கள்:- என். சண்முகதாசன்
எஸ். டி. பண்டாரநாயக்க எம். பீ.
ஐ. ஏ. கரணுகொட,
எச் எல். ஆர். கரவிட்ட, சிறி சமரநாயக

ஊர்வலம் மாலை 4 மணிக்கு கொம்பனித் தெரு டிமெல் டார்க்கிலிருந்து புறப்படும்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி


# தமிழரசு கட்சியை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்

**தனது முன்னுள் தலைவர்களில் ஒருவரான ஊர்காவற்றுரை பாராளுமன்ற உறுப்பினர் திரு. நவரத்தினம் கூறிய அறிவுரையை ஏற்று தமிழரசுக் கட்சி எவ்வளவு விரைவாக தற்கொலை செய்து கொள்கிறதோ, அவ்வளவு தமிழ் மககளுக்கும் முழு இலங்கை மக்களுக்கும் நல்லதாகும். தமிழரசுக் கட்சி நீண்ட காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வந்துள்ளது. பாராளுமனற அரசியல் விளையாட்டில், அது விளையாட எடுத்த முயற்சியின் வங்கலோட்டுத் தனமும் நன்கு அம்பலமாகி விட்டது.**

கடந்த 1956 ம் வருடத்திற்குப் பிறகு இன்றுவரை தமிழரசுக் கட்சி மூன்று தடவைகள் சிங்கள முதலாளித்துவ கட்சிகளால் ஏமாற்றப்பட்டுள்ளது. முதலில், அது நம்பிக்கை வைத்திருந்த சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பிற்போக்கு, வகுப்புவாத, குறுகிய தேசியவாத சக்திகளின் ஒரு பகுதியின் நெருக்குதலினல், காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா. தான் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

இரண்டாவதாக, மாவட்ட சபைகள் ஏற்படுத்தப்படும் என்று அடுத்தடுத்து சிம்மாசனப் பிரசங்கத்தில் அளித்த வாக்குறுதியை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா காப்பாற்றவில்லை. மூன்ருவதாக, இப்பொழுது கனவான் டட்லி சேனநாயக்கா, ''தேசிய'' அரசாங்கம் ஏற்படுவதற்கு அடிப்படையாயிருந்த தமிழரசுக் கட்சிக்குத் தான் கொடுத்த ரகசிய வாக்குறுதியை கைவிட்டுவிட்டார்.

முதலாளித்துவ அரசியல் வாதிகளின் பெருமிதமான வாக்குறுதிகள், எழுதப்பட்ட தாளின் பெறுமதிகூட இல்லை என்பதை, தமிழரசு கட்சி தனது செல்வாக்கை இழந்து கற்றுக்கொண்டுள்ளது. இந்த நிலைமைக்கு வேறு யாரையுமல்ல, தமிழரசு கட்சி தன்னைத் தானே குற்றஞ்சாட்டிக் கொள்ளவேண்டும். பாராளுமன்றத்தில் ஒரு தனி அரசியல் கட்சியும் கூடுதலான பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்ற முடியாமல் இருந்த நிலையில், காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலைக்குப்பின் வளர்ந்து வந்த அரசியல் நிலைமையை தமிழரசு கட்சி பயன்படுத்திக் கொண்டு பாராளுமன்ற அரசியல் விளையாட்டை விளையாட முயன்றது. மந்திரி சபையை உருவாக்கும் சூத்திரதாரியாக வர எண்ணியது. 1960 மார்ச்சில் திரு. டட்லி சேனநாயக்காவின் சிறுபான்மை அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிர்க் கட்சியுடன் ஒத்துழைத்தது. 1964 டிசம்பரில் கூட்டரசாங்கத்தை வீழ்த்த அது யு. என். .பியுடன் சேர்ந்தது. 1965 மார்ச்சில் பூரணமான பெரும்பான்மை கிடைக்காத யு. என். பி. தனது வர்க்க நலனின் அடிப்படையில் ஒன்றுசேர்ந்து, யு. என். பி. யின் தலைமைப் பீடத்துடன் இரகசிய ஒப்பந்தம் செய்து அரசாங்கம் அமைக்கவும் உதவி புரிந்தது.

இம்மட்டல்ல, எல்லா வேளைகளிலும், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்காளர்களிடமும், புரட்சிகரப் பகுதிகளிடமும் — முக்கியமாக தொழிலாளி— விவசாயி மக்களில் நம்பிக்கை வைக்கவோ, அல்லது உதவி கோரவோ தமிழரசு கட்சி உறுதியாக மறுத்தும் வந்துள்ளது. உண்மையில் அதன் கொள்கைகளும், நடவடிக்கைகளும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்குப் பகுதியைச் சினமூட்டவே செய்தன. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், அவரது தமிழ் காங்கிரஸும் விட்ட இடத்திலிருந்து, தமிழரசு கட்சி பல காலமாக தீவிரமான, இரத்தம் உறையும் சிங்கள எதிர்ப்பு வகுப்புவாதத்தில் முக்குளித்தது. இப்படித்தான் அவர்கள் சமஷ்டியைக் கோரினர்கள்— சாதாரண சந்தர்ப்பங்களில் இக் கோரிக்கை தீங்கானதல்ல. இது சிங்கள மக்களுக்குவெறுப்பான ஒன்று.

பாராளுமன்றத்தில் பண்டாரநாயக்கா அரசாங்கங்களால் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு முற்போக்கு மசோதாவையும்-நெற்காணி மசோதா, பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றல், அந்நிய எண்ணெய் கம்பெனிகளைத் தேசியமயமாக்கல், இன்சூரன்ஸ் கம்பெனிகளைத் தேசியமயமாக்கல் ஆகியவற்றையெல்லாம்— எதிர்த்தனர். திருகோணமலைத் தளத்திலிருந்த பிரிட்டிஷாரை வெளியேறும்படி காலஞ்சென்ற எஸ். டபிள்யூ: ஆர். டி. பண்டாரநாயக்கா கேட்டபோது, தமிழரசு கட்சி அதற்கெதிராக இராணிக்கு மனு அனுப்பியது. ''சுதந்திர'' தினங்களில் அக் கட்சியினர் சீற்றத்துடன் கறுப்புக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

எல்லா நடவடிக்கைகளிலும் தமிழ் மக்களின் நலன்களை - வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி, அல்லது தோட்டப் பகுதிகளிலும் சரி - தமிழரசு கட்சி பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. சமூக ரீதியாகப் பழமை வாய்ந்ததும், மிகவும் பிற்போக்கானதுமான யாழ்ப்பாணத் தமிழ் மக்களது நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ பகுதியின் நலன்களையே அது பிரதிநிதித்துவப் படுத்தியது. ஆதலால் தான் சிங்கள மக்களின் வயிற்றில் அடித்தது போல தமிழ் மக்களின் வயிற்றிலும் அடித்த கூப்பன் அரிசியைப் பாதியாக வெட்டிய ஆட்சியின் நடவடிக்கையை எதிர்த்துக் குரல் எழுப்பவில்லை.


— 12-ம் பக்கம் பார்க்க


## சுன்னுகம் ஊர்வல வழக்கு

தீண்டாமையையும் சாதி ஒடுக்கு முறையையும் எதிர்த்து 1966 ஒக்டோபர் 21ந் தேதி நடந்த, பிரசித்தி பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் சம்பந்தமான வழக்கு இம் மாதம் 21-ந் தேதி மீண்டும் மல்லாகம் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது. பிரபல வழக்கறிஞர் சத்தியேந்திரா ஆஜராகிறுர்.



எதிரி மேல் ஆழமான பகைமை கொண்ட வியட்நாம் மக்கள் படையின் போராளி தனது போராட்டத் திறமையை விருத்தி செய்ய பயிற்சி செய்யும் காட்சி.

# வியட்நாம் மக்கள் வெற்றி பெறுவார்கள்

1968-ம் ஆண்டு ஜூலை 20-ந் தேதி, வியட்நாமுக்கான ஜெனிவா ஒப்பந்தத்தின் 14-வது ஆண்டு நிறைவாகும். வியட்நாமில் பிரான்ஸின் ஆதிக்கத்தைத் திரும்பவும் புகுத்த முயன்ற பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக, ஒன்பது நீண்ட ஆண்டுகள் கடும் போர் செய்த வீரஞ்செறிந்த வியட்நாம் மக்களுக்கு இந்த ஜெனிவா ஒப்பந்தம் சமாதானத்தைத் தரும் என்று மக்கள் நம்பினார்கள். இப் போர் சரித்திரப் புகழ் மிக்க டியன் பியென் பூ கோட்டையில் பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகளின் தாழ்வு மிக்கத் தோல்வியில் முடிவடைந்தது. பிரான்ஸ் தோல்வியை ஏற்றுக் கொண்டது.

ஜெனிவா ஒப்பந்தம் வியட்நாமின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்றுக் கொண்டது. ஆனால், தற்காலிகமாக 17-வது சமரேகையை எல்லையாகக் கொண்டு வடக்கு-தெற்கு என்ற இரண்டு பிரதேசங்களாக வியட்நாம் பிரிக்கப் பட்டது. வியட்நாமியத் துருப்புக்கள் சமரேகைக்கு வடக்கே செல்ல வேண்டும். பிரெஞ்சுத் துருப்புக்கள் சமரேகைக்குத் தெற்கே சென்று வியட்நாமை விட்டு வெளியேற வேண்டும். இரு தரப்புத் துருப்புகளுக்கிடையே மோதல்களைத் தவிர்ப்பதற்கே இந்த ஒழுங்கு செய்யப் பட்டன.

இந்தப் பிரிவினை தற்காலிகமானது என்று தெளிவாக்கப் பட்டதுடன் 1956-ல் — அதாவது இரண்டு வருடங்களுக்குள் முழு வியட்நாமுக்குமான அரசாங்கத்தைத் தீர்மானிப்பதற்கு தேர்தல்கள் நடத்தவும் ஏற்பாடுகள் நடந்தன. இதற்கிடையில் இரு பிரதேசங்களிலும் உள்ளுக்குள் அந்நியத் துருப்புக்களை நிறுத்துவதோ அல்லது அந்நிய இராணுவத் தளங்களைஅமைப்பதோ தவிர்க்கப் பட்டன.

## அமெரிக்கா ஒப்பந்தத்தை மீறியது

ஆனால் இந்த ஒப்பந்தங்கள் ஒரு போதும் அமுலாக்கப்படவில்லை. ஏனெனில் இந்த ஜெனிவா ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட நாடுகளில் ஒன்றான அமெரிக்கா இந்த ஒப்பந்தங்களை முரட்டுத்தனமாக மீறியது. பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகள் தம் துருப்புக்களை வாபஸ் பெறுவதால் ஏற்படும் வெற்றிடத்தை அமெரிக்கா நிரப்ப எண்ணியது. தென் வியட்நாமில் ஒரு பொம்மை அரசாங்கத்தை நிறுவி அதற்கு அமெரிக்கத் துருப்புக்களையும் ''ஆலோசகர்களை''யும் அந்நாட்டிற்குள் ''அழைக்க'' ஒழுங்குகள் செய்தது. 1955-ல் நடத்துவதாக வாக்களிக்கப் பட்ட பொதுத் தேர்தல்களை நடத்தாமல் மறுக்கும் படி பொம்மை அரசாங்கத்தை அது வற்புறுத்தியது. ஏனெனில், வியட்நாமிய மக்களின் அன்புக்குரிய தலைவர் ஹோ சி மின் கை கட்டிக் கொண்டிருக்கவே அவருக்குச் சாதகமாக தேர்தல்கள் முடியும் என்று அமெரிக்காவுக்கு நன்கு தெரியும்.

டியம் என்பவரைத் தலைவராகக் கொண்ட இந்த பொம்மை அரசாங்கம் கம்யூனிஸ எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்தது. தென் வியட்நாம் மக்களுக் கெதிராக முன்னெப் போதும் கேள்விப்படாத அட்டூழியங்களைச் செய்தது. மக்கள் இதைப் பொறுத்துக் கொண்டிருக்கத் தயாராயில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் பொம்மை ஆட்சிக்கும் எதிராக எதிர்ப்பு யுத்தம் மீண்டும் வெடித்தது. 1960 டிசம்பர் 20-ந் தேதி போராட்ட இயக்கத்தை வழி நடத்த தென் வியட்நாம் விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது.

ஆகவே, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக் கெதிரான வியட்நாமிய மக்களின் இந்த விடுதலை யுத்தம், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்திய யுத்தத்தின் தொடர்ச்சி தான் என்பது தெரியும்.

பொம்மைத் துருப்புக்கள் உண்மையில் சண்டை செய்ய அமெரிக்க ''ஆலோசகர்களால்'' மட்டும் வியட்நாமிய மக்களை அடக்க முடியும் என்று தொடக்கத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் எண்ணியது. ஆனால், ஆக்கிரமிப்புக் கெதிரான வியட்நாம் மக்களின் யுத்தம் அதிகரிக்க, அதிகரிக்க தனது சொந்தத் துருப்புக்களைக் கொண்டு வந்து குவித்து வியட்நாமுக் கெதிரான ''பிரகடனப் படுத்தாத போரை'' அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடங்கியது.

## வருடத்துக்கு மூவாயிரம் கோடி டொலர்

கொரியாவுக் கெதிராக நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தில் உபயோகித்த துருப்புக்களின் எண்ணிக்கையை விட மிகக் கூடுதலான துருப்புக்களை நுழைத்திருக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். அமெரிக்க இராணுவப் படை, அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள நாடுகளின் துருப்புக்கள், தென் வியட்நாம் பொம்மை அரசாங்கத் துருப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை பத்து லட்சத்தையும் தாண்டி விட்டது. ஏறத்தாழ தரைப்படையின் அரைவாசி, ஐந்தில் ஒரு பங்கு விமானப் படை, கால்வாசிக்கு மேல் கடற்படை — இவையெல்லாவற்றையும் அமெரிக்கா அனுப்பியுள்ளது. அணுகுண்டைத் தவிர மற்றும் எல்லாவிதமான புதிய ஆயுதங்களையும் அது உபயோகித்துள்ளது. வருடமொன்றுக்கு மூவாயிரம் கோடி டாலர் இந்த யுத்தத்தில் செலவிடுகிறது. பி. 52 விமானங்களாலும், ஏனைய விமானங்களாலும் குண்டுவீசி அழிக்கிறது. ஒவ்வொரு மாதமும் பதினேழு லட்சம் பீரங்கிகளையும் கோடிக்கணக்கான தோட்டாக்களையும் சுட்டுத் தள்ளுகிறது.

வியட்நாமில் தோல்வி கண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் மக்களைப் பலாத்காரத்தினால் பணிய வைக்கலாம் என்ற வீண் எண்ணத்தில் யுத்தத்தை வட வியட்நாமுக்கும் விஸ்தரித்தது. ஆனால் நடந்தது எதிர் மாறானது. வியட்நாம் ஜனநாயகக் குடியரசுக் கெதிரான நியாயமற்ற வேண்டு மென்றே செய்யும் ஆக்கிரமிப்பு வட வியட்நாம் மக்களினது ஒற்றுமையை

**எமது விசேஷ நிருபர்**

மேலும் இறுகச் செய்தது. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு இரு பகுதி மக்களும் பலமான உதைகளைக் கொடுத்துள்ளனர்.

வியட்நாமிய மக்கள், யுத்தத்திற்குத் தமது முழு சக்தியையும் கொடுத்து கடந்த எட்டு ஆண்டுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களினது மூன்று லட்சம் துருப்புக்கள் உட்பட பதினைந்து லட்சம் எதிரித் துருப்புக்களை அழித்தொழித்தனர். தென் வியட்நாமின் ஐந்தில் நான்கு பங்கு நிலப்பரப்பும், மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகையும் விடுவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக இவ் ஆண்டின் 'ரெற்'' தாக்குதலின் போது, எதிரியின் கோட்டையான சைகோனின் நடுவிலேயே தாக்குதல் தொடுத்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு மிகப் பெரிய தோல்விகளை உண்டாக்கினர். மிகப் பெரிய தோல்விகள் அமெரிக்கத் தளபதி ஜெனரல் வெஸ்ட் மோலண்டையே பதவி நீக்கஞ் செய்ய வைத்தன.

# அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் தோற்கடிக்கப் படுவார்கள்

வட வியட்நாம் மக்கள், தென் வியட்நாமிலுள்ள தேசபக்தர்களுக்கு முழு ஆதரவும் கொடுத்ததோடு வட வியட்நாமில் தொடுத்த அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் கபட நாடகக் கொள்கைப் போருக்கு எதிராகப் பலத்த அடிகளும் கொடுத்துள்ளனர். கடந்த மூன்று வருடங்களில் அவர்கள் மூவாயிரத்திற்கு அதிகமான அமெரிக்க கொள்ளை விமானங்களைச் சுட்டுவீழ்த்தியுள்ளனர்.

வியட்நாமிய மக்களும் விடுதலைப்படையும் முன்னெப்போதையும்விட இன்று தாமே தாக்கும் சக்தியைத் தமது கையில் உறுதியாக வைத்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புக்களோ போராட முடியாது, கேவலமான உதைகளையும் வாங்கிக் கொண்டு செய்வதறியாது விழிக்கின்றன.

உலகின் மிகப்பலம் வாய்ந்த ஓர் ஏகாதிபத்திய வல்லரசை ஒரு சிறிய நாடு எதிர்த்துச் சிறப்பான வெற்றியை ஈட்டியுள்ளதற்குரிய காரணம் எங்கே உள்ளது? தென் வியட்நாம் விடுதலைப் போராளிகள் இதை நன்கு கூறியுள்ளார்கள். ''உருக்கு, விமானங்கள், பீரங்கிகளையே எதிரி நம்பியுள்ளான் ஆனால், தாய்நாட்டின் விடுதலைக்கான போராட்டத்திலிருந்து பீறிடும் ஆத்மீகப்பலத்திலேயே நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். எதிரியின் பொருட் பலத்தைவிட, எமது ஆத்மீக பலம் பத்து மடங்குகள் உண்மையில் நூறுமடங்குகள், உண்மையில் ஆயிரம் மடங்குகள் அதிகம் சக்தி வாய்ந்தது''

தென்-வியட்நாம் விடுதலைப் படையிடமும், மக்களிடமும் விமானங்கள், டாங்கிகள், போர்க்கப்பல்கள் இல்லாவிடினும் பெருமளவில் எதிரியின் விமானங்களைச் சுட்டுவீழ்த்தவும், டாங்கிகளை அழிக்கவும், கப்பல்களை மூழ்கடிக்கவும் செய்கிறார்கள். எதிரியின் இராணுவ வாகனங்களையும் விமானங்களையும் விட அவர்களின் களைக்காத கால்கள் ஓடி ஆடித்திரியக் கூடியதாயிருக்கின்றது. இன்னல்களுக்கும், இறப்புக்கும் அஞ்சாது யுத்தத்தில் தங்களை அர்ப்பணித்துப் போர் புரிகிறார்கள்.

தோழர் மா சே-துங் கூறியுள்ளார்: போர் புரிவதற்குரிய பலத்தின் வளமான ஊற்று வெகுஜனங்களிடையே உள்ளது. மீண்டும் சொல்கிறார்: போரில் ஆயுதங்கள் ஓர் இன்றியமையாத காரணக்கூறே. ஆனால் அவை முடிவான காரணக் கூறு அல்ல. பொருட்கள் அல்ல, மக்கள் தாம் முடிவானவர்கள். பலப்போட்டி என்பது இராணுவ பொருளாதார பலத்தின் போட்டி மட்டுமல்ல, அது மனித சக்தியினதும் மன உறுதியினதும் போட்டியுமாகும். இராணுவ பலமும், பொருளாதார பலமும் கட்டாயமாகக்கையாளப்படுவது மக்களாலேயே'' வியட்நாமிய தேசபக்தர்களின் வீரப் போராட்டம் இவ்வாசகத்தின் உண்மையைத் தேவையான அளவு மெய்ப்பித்துள்ளது.

முழு வியட்நாம் மக்களினதும் வெல்ல முடியாத போராட்டத்தைக் கண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் இரட்டைத் தந்திரங்களான வடக்குக்கு யுத்தத்தைப் படிப்படியாக அதிகரிப்பதும், மறுபக்கம் சமாதான மோசடி விளையாட்டை விளையாடுவதையும் மேற்கொள்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பின்னைய முயற்சிக்கு சோவியத் திரிபுவாத ஆளும் கும்பல் உதவி புரிகிறது. கேவலமாக உதை வாங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்காக வியட்நாமிய மக்களை மாநாட்டு மேசைக்கு வர இணங்க வைக்க எல்லா வகை ஏவற்பணிகளையும் இத்திரிபுவாத கும்பல் செய்கிறது. இதற்கிடையில் தான் இழந்ததை மீண்டும் பெறுவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியதிற்குக் கொஞ்சம் அவகாசம் தேவையாயுள்ளது.

வியட்நாமில் அமெரிக்க இராணுவ யந்திரத்தை வியட்நாமிய மக்கள் யுத்தம் வென்று விட்டது. வியட்நாமிய மக்களை மாநாட்டு மேசைக்குக் கொண்டுவரச் செய்யும் முய

12-ம் பக்கம் பார்க்க

### உதாரணத்துக்கு ஒரு பாடம்

ஆகஸ்ட் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற இருக்கும் அணு ஆயுத மற்ற நாடுகளின் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்புமாறு கேட்டுக் கொண்டு ஐ. ந. காரியதரிசி ஊதாண்ட் மக்கள் சீனவுக்கு ஓர் அழைப்பு அனுப்பியிருந்தார். சீனு அந்தக் கடிதத்தை பிரிக்காமலே அனுப்பி விட்டது.

# இந்த அரசாங்கத்தின் மேல் நம்பிக்கை இல்லை

## சிம்மாசனப் பிரசங்கத்திற்கு கம்யூனிஸ்ட் எம். பி. தோழர் எஸ். டி. பீ யின் திருத்தப் பிரேரணை

**நாட்டை எதிர் நோக்கியுள்ள பிரதான பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் சிம்மாசனப் பிரசங்கத்தில் எவ்விதத் தீர்வும் காணப்படாததால் இந்த அரசாங்கத்தின் மீது இச் சபைக்கு நம்பிக்கை இல்லை எனும் திருத்தப் பிரேரணையை கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ். டி. பண்டாரநாயக்க கொண்டு வருகிறார். இத் திருத்தப் பிரேரணை பாராளுமன்ற லிகிதரிடம் 12 ந் தேதி கையளிக்கப் பட்டது.**

தோழர் எஸ். டி. யின் திருத்தப் பிரேரணையின் முழு விபரம் வருமாறு:

மகாதேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கத்தில் ஒரு திருத்தத்தைப் பிரேரிக்க நான் விரும்புகின்றேன்.

ஆறுவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரின் சிம்மாசனப் பிரசங்கத்தில் பின்வருவன இடம் பெறாததற்காக நான் வருந்துகின்றேன்.

1. இருபது வருடங்களாக சுதந்திரம் அடைந்திருக்கின்றோம் என்று கூறப்பட்ட போதிலும், நமது நாட்டின் பொருளாதாரத்தில் தொடர்ந்து இருந்து வரும் அந்நிய ஏகாதிபத்தியதின் இறுக்கமான பிடிப்பை பற்றி எதுவுமே குறிப்பிடாததோடு, அந்நிய ஏகாதிபத்தியத்தின் தோர்ச்சில்லில் எமது நாட்டுப் பொருளாதாரத்தை விலக முடியாதபடி மேலும் இறுக்கமாகப் பிணைத்திருப்பது பற்றியும் குறிப்பிடவில்லை.

2 1929—31-ம் ஆண்டுக் குப்பின் எமது நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பங்கீட்டரிசியைப் பாதியாகக் குறைத்தது, சென்ற வருடம் ரூபாயின் மதிப்பை இரு முறைகள் குறைத்தது, அதனால் வானளாவ உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவு, அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு ஆகியவற்றிற்குக் காரணமான இந்நாட்டில் ஏற்பட்டுள்ள இப் படுமோசமான பொருளாதார நெருக்கடியைப் பற்றித் தெளிவான ஆராய்வு இடம் பெறவில்லை.

3. வாழ்க்கைச் செலவைக் குறைத்து அதன் மூலம் மக்களின் துயரைத் தீர்ப்பதற்கும், மிகவும் உச்ச கட்டத்தை அடைந்துள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கும் எவ்வித பிரேரணையும் இடம் பெறவில்லை.

4. விலைவாசியின் தாங்க முடியாத உயர்வினால் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோருக்கு அத்தகைய நிவாரணத்துக்கான பிரேரணையையும் குறிப்பிடவில்லை.

5. 1967, 68-ம் வருடங்களில் அதிக விளைச்சல் ஏற்பட்டுள்ளது என தம்பட்டமடிக்கப்படுகிறது. உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் முழு வெற்றியை அளித்துள்ளது எனவும் பெருமையடித்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் இந்த நிலையிலும் வெட்டிய அரிசியை மீண்டும் மக்களுக்குக் கொடுப்பது பற்றி எதுவுமே கூறப்படவில்லை.

6. இந்த அரசாங்கம் பதவியிலிருந்த முப்பத்தொன்பது மாதங்களில், முப்பது மாதங்களாக இருந்து வருகின்ற அவசரகால நிலைமையை அகற்றி, மக்களுடைய ஜனநாயக உரிமைகளை மீண்டும் பெறச் செய்வதற்கான திட்டத்தையும் குறிப்பிடவில்லை.

7. துரிதமான கைத் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், இரண்டொரு ஏற்றுமதிப் பொருட்களில் மாத்திரம் தங்கியிருக்கும் இந்நாட்டின் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரமாக மாற்றியமைப்பதற்குமான எந்தத் திட்டமும் இடம் பெறவில்லை.

8. நம்நாட்டு ஆறுகள் விவசாயிகளுக்குச் சேதத்தையும் அழிவையும் உண்டாக்காதபடியும், விலைமதிப்பற்ற மழைநீர் வீண் விரயமாகாதபடியும் தடுக்க வேண்டும். இதற்கு ஆறுகளிலுள்ள சேற்றை அகற்றி, ஆழமாக்கி, அந்நியருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களைத் தேசியமயமாக்கி, மலையுச்சிகளில் காடு வளர்த்து, மண்ணரிப்பைத் தடுத்து, எமது நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெருந்தடையாக உள்ள நீர்ப்பாசன வசதியின்மையை ஒழித்து, நாட்டின் விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எத்தகைய திட்டமும் இடம் பெறவில்லை.

9. சமூகக் குறைபாட்டுத் தடைச் சட்டத்தை அமுல் செய்யவும், வட இலங்கையில் இருந்து வரும் செல்லரித்துப் போன தீண்டாமையையும், சமூக ஒடுக்குமுறையையும் அகற்றுவதற்கும் உதவியளிக்கக் கூடிய விதத்தில் செயல்பட எவ்வித உறுதிப்பாட்டையும் காட்டத் தவறியுள்ளது.

10. இன்றைய கல்வித் துறையின் நிலைமை மாணவர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக இந்நாட்டின் கல்வித் துறையிலும், சமூக அமைப்பிலும் பூரணமான, தீவிரமான ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் மாணவரிடையே உருவாகியுள்ளது. இதற்குக் காரணமான மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளான விரிவுரை மண்டபங்கள் தட்டுப்பாடு, போதிய விரிவுரையாளர்கள் இல்லாமை, ஏழை மாணவர்களுக்கு போதிய அளவு உதவிப்பணம் இல்லாமை, பரீட்சைக் கட்டணத்தை உயர்த்தியுள்ளது, கல்வித் துறையில் சம்பந்தப்படாத நிர்வாகிகளைப் பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களாக நியமித்தது போன்ற பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வும் காட்டவில்லை.

11. இந்தநாட்டில் சிங்கள, தமிழ்மக்கள் மத்தியில் ஐக்கியம் ஏற்படாது சிங்கள தமிழ் மக்கள் மத்தியிலுள்ள பிற்போக்குவாதிகளுக் கிடையேதான் ஐக்கியம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் தம்பட்டமடிக்கின்ற இந்தப் போலி தேசிய ஐக்கியத்தை, பிற்போக்குத் தமிழரசுக் கட்சிக்கும் அரசாங்கத்திற்குமுள்ள ரகசிய ஒப்பந்தத்தின் மூலம் இந்நாட்டின் தேசிய இனங்களின் மத்தியில் உண்டாகியுள்ள ஐக்கியமின்மை அம்பலப்படுத்துகிறது. ஆனால் இந்த ஐக்கியமின்மையைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

12. தந்திரமிகுந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் எம்மீது திணித்துள்ள வங்கலோட்டான முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகம் கடந்த முப்பத்தேழு ஆண்டுகளாக எமது நாட்டில் இருந்தும் கூட, இன்றுவரையும் சிறிதும் குறையாது தொடர்ந்து இருந்து வரும் ஏகாதிபத்திய முதலாளித்துவச் சுரண்டல் முறையைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

13. வியட்நாம் மக்கள்மீது தேவையற்ற ஆக்கிரமிப்பு நடத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் கூலிப் படைகளை தென்வியட்நாமிலிருந்து வாபஸ் பெறுவது, தென்வியட்நாமிலிருந்து தளங்களை அகற்றுவது, வடவியட்நாம்மீது குண்டுவீச்சை நிறுத்துவது, தமது எதிர்காலத்தை தாமே நிர்ணயிக்க வியட்நாம் மக்களை விடுவது ஆகியவற்றில் எமது நாட்டு மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கத் தவறியுள்ளது.

14. அமெரிக்காவின் மத்திய உளவு ஸ்தாபனத்தின் (சி.ஐ.ஏ.) ஓர் அங்கமாக அம்பலப்படுத்தப்பட்ட பிரசித்தி பெற்ற அமெரிக்க சமாதானப் படையை மீண்டும் எமது நாட்டுக்கு வர அனுமதியளித்ததன் மூலமும், நம் நாட்டு மக்களுக்கு எதிராக நாசகார வேலைகளில் ஈடுபடுவதற்கு அமெரிக்க ஏகாதிபத்திய ஹோப் கப்பலை கொழும்புத் துறைமுகத்திற்கு வர அனுமதியளித்ததின் மூலமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உத்தரவுகளுக்கு இந்த அரசாங்கம் அடிமைப்பட்டிருக்கின்ற உண்மையைப் பிரதிபலிக்கத் தவறியுள்ளது.

எனவே, இச் சபைக்கு உமது அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லை.

## சுரண்டும் சமூக அமைப்பை மாற்றுவதன் மூலமே தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீரும்

"சென்ற முப்பது வருடகாலமாக காங்கிரஸ் போன்ற கட்சிகள் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இருந்தன. ஆனாலும் கூட தோட்டத் தொழிலாளர்களின் எதுவித பிரச்சினையும் தீர்ந்து விடவில்லை. சென்ற நூறு வருட காலமாகத் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதாரப் பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றார்கள். அவர்களின் பிரச்சினைகள் அன்று இருந்ததை விட இன்று அதிகரித்திருக்கின்றனவே ஒழிய குறைந்து விடவில்லை'' இவ்வாறு அப்புத்தளை செங்கொடிச் சங்க கிளைக் கூட்டமொன்றில் பேசும் பொழுது இ. தோ. தொ. ச. (செங்கொடிச் சங்க) உப செயலாளர் தோழர் ஒ. ஏ. இராமையா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசிய பொழுது, ''தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்றுள்ள பிரச்சினைகளில் தலைக்கு மேல் போகும் பிரச்சினை பற்றுச் சீட்டுக் கொடுத்தல். இதற்கு மேல் பெரியதாக தோட்ட நிர்வாகம் இவர்களை பலிவாங்க முடியாது. இந்தப் பிரச்சினையை நாங்கள் பேச்சுவார்த்தையின் மூலம் பேசித் தீர்த்து விடலாம் தான். என்றாலும் முத்துச்சாமிக்கு வேலை பெற்றுக் கொடுக்க, கந்தையாவை தோட்ட நிர்வாகம் வேலையிலிருந்து நீக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இதைப் போன்று தான் எல்லா பிரச்சினைகளும். தொழிற் சங்கத்தின் மூலம் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தற்காலிகமாக ஒரு சிறு நிவாரணம் பெற முடியுமே யொழிய நிரந்தரமாக பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது. இந்த சமுதாய அமைப்பில் இந்த நிலை மாற்றப்பட முடியாத ஒன்று. இந்த சமுதாயம் மாற வேண்டும். ஆட்சியைத் தொழிலாளி வர்க்கம் கைப்பற்ற வேண்டும். அன்று தான் இந்தப் பிரச்சினைகள் நிரந்தரமாகத் தீரும். இதனால் தான் நாங்கள் அரசியலை முன் வைக்கின்றோம். ஏனைய மலை நாட்டுத் தொழிற் சங்கங்களுக்கும் எங்களுக்கும் இதில் பெருத்த வேறுபாடுகள் இருக்கின்றன. அவர்கள் அரசியலாகக் கணிப்பது பிரஜா உரிமை பிரச்சினையை மட்டும் தான். மற்றவற்றை யெல்லாம் சாதாரண பேச்சுவார்த்தைகளால் தீர்த்து விட முடியுமென்று கருதுகின்றார்கள். ஆனால் பேச்சுவார்த்தைகள் ஏதும் செய்து விட முடியாது. இதை நாங்கள் அனுபவ பூர்வமாகக் கண்டிருக்கின்றோம். சென்ற நூறு வருட காலமாக அனுபவித்து வருகின்றோம்! என்றும் குறிப்பிட்டார்.

மாவட்டப் பிரதிநிதி தோழர் வி. எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மாவட்ட கிளை கமிட்டியும் தெரிவு செய்யப் பட்டது.

## திரும்பவும் வேலை

கல்பர்ன் தோட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த கந்தாய், சடையன் இருவரும் செங்கொடிச் சங்கத்தின் முயற்சியால் திரும்பவும் 17-7-68 முதல் வேலை பெற்றுள்ளார்கள்.

## நம்மைச் சுற்றி

நவம்

# நெருப்புடன் விளையாடுவோர் வெந்து நீருவார்

தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் நடத்தும் மாவிட்டபுரம் ஆலயப்பிரவேச இயக்கம் பற்றியே நாடு முழுதும் பேசப்படுகிறது. இந்தப் பேச்சில் வவுனியா சுந்தரலிங்கத்தாரின் நாமமும் நன்கு அடிபடுகிறது. மனித உரிமை மறுக்கும் பிற்போக்குவாதிகளின் புதிய கதாநாயகனுக வந்திருக்கு இந்தச் சுந்தரரின் தலைமையில் உள்ள குண்டர் படை, மாவிட்டபுரம் கோயிலுக்கு வழிபடச் சென்றவர்களைத் தடுத்ததைக் கண்டு நாகரிக உள்ளம் படைத்த

மாட்டிறைச்சி தின்கிறவர்களையும், கள்ளுக் குடிக்கிறவர்களையும் கோயிலுக்குள் விடப்படாது என்று மற்ருெரு காரணத்தையும் கூறுகிருர் இந்த மாஜி எம். பி. இவருடைய கருத்துப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் சகலருமே மாடு தின்னியளும் கள்ளுக் குடிகாரருமாவர். கொழும்பில் எத்தனை உயர் சாதித் தமிழர் மாட்டிறைச்சி தின்கிருர்கள் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரியும். பேராதனைப் பல்கலைக் கழக விடுதிகளில் மாட்டிறைச்சிதான் சமைத்துப் போடப்படுகிறது. அங்குள்ள ''உயர் சாதி'' தமிழ் மாண

வரவேற்காமல் முற்றத்தில் நிறுத்தி வைத்து கதைத்து விரட்டியடிக்கிறது தான் தமிழர் பண்பாடு என சுந்தரலிங்கத்தின் வாயால் முதன் முதல் கேள்விப்படுகின்ருேம். சுந்தரலிங்கம் கோருகிற ''சுதந்திர ஈழத்தமிழக''த்தின் பண்பாடு இதுதானே?

'சுதந்திர ஈழத்தமிழகம்'' என்றவுடன் சமட்டிக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற ''ஈழத் தமிழர் விடுதலை இயக்கம்'' என்ற கும்பலின் ஞாபகம் வருகிறது. இக்கும்பலுக்கு அரசியல் அநாதை கந்தரலிங்கம் தான் தலைவர். தீண்டாமைக் களுக்கெதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் தற்பாதுகாப்புக்கு தொண்டர்படை ஒன்று அமைக்க வேண்டாம்; அது பலாத்காரத்தை உருவாக்கும் என்று ''வேண்டுகோள்'' விடுத்திருக்கிருர். இவருடைய கண்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தற்காப்புக்காக ஏதாவது செய்தால் அதுதான் அமைதியைக் குலைக்கும். ''உயர்சாதி'' தமிழர் எது செய்தாலும் பரவாயில்லை. சாதி வெறியர் சுந்தரலிங்கத்தின் தலைமையில் படை அமைத்து தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளைத் தடைசெய்யும் போது தாழ்த்தப்பட்ட மக்கள்

சளைச் சட்ட விரோதமான முறையில் குண்டர்படை தடுத்து நிறுத்திச் சட்டத்தை மீறியபோது, சமூகக் குறைபாட்டுத் தடைச் சட்டத்தை அமுல் நடத்த வேண்டிய பொலிசார் சட்டத்தை மீறி காரியம் செய்யும் குண்டர்களைக் கைது செய்யவில்லை. இது, பொலிசாரும், அவர்ளுகடைய அரசாங்கமும் யார் பக்கம் நிற்கின்றனர் என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துலாம்பரமாகக் காட்டிவிட்டது. அவர்கள் சட்டத்தின் மீதோ, பொலிசின்மீதோ, அரசாங்கத்தின் மீதோ நம்பிக்கை வைத்துப் பிரயோசனமில்லை என்பதையும், தமது

## ★ புழுத்த நியாயம் பேசும் பழசான கனவான்

அனைவரும் நகைக்கிருர்கள்; காரித்துப்புகிருர்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயத்திற்குள் செல்ல விடாமல் தடுப்பதற்கு சுந்தரலிங்கம் கூறும் காரணங்கள் அபத்தமானவை என்பது மட்டுமல்ல, ஆத்திரத்தையும் கிளறுபவை. தினகரன் நிருபருக்கு அளித்த பேட்டியில் சுந்தரலிங்கம் தனது காரணங்களைக் கூறியுள்ளார். தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயத்திற்குள் செல்வதால் இறைவனுடைய சந்நிதி அசுத்தமாகிவிடுமாம்! புனிதம் கெட்டுப் போகுமாம்! தீட்டுப்பட்ட பெண்கள் ஆலயத்திற்குள் சென்ருல் எப்படிப் புனிதம் கெட்டுப் போகுமோ அப்படியே தாழ்த்தப்பட்ட மக்களும் ஆலயத்திற்குள் சென்ருல்

வர்கள் அதை ஒரு ''கை'' பார்க்காமல் விடுகிருர்களா? அல்லது தீண்டாமல் விடுகிருர்களா? யாழ்ப்பாணத்தில் ''உயர் சாதி'' தமிழர்கள் கள்ளுக் குடிக்கிறதில்லை என்று சுந்தரலிங்கம் சொல்லப் பார்க்கிருர். இந்தப் பனம்—தென்னம்பாலை அனுபவித்து வரும் எத்தனையோ ''உயர் சாதி''த் தமிழர் அதன் ''மகிமை''யைப் பற்றி காவியம் பாடத் தயார் என்பது சுந்தரனுருக்குத் தெரியாதோ? கிளிநொச்சியில் ''மேற்குல'' காசிலிங்க சர்மா கள்ளுக் குடித்ததாகக் கோகிலாம்பாள் வழக்கில் சொல்லப்பட்டது கூட இந்த மண்டூகத்திற்குத் தெரியாதோ? சுந்தரலிங்கமும் துரைசாமிக் குருக்களும் பால் குடிக்கிறதில்லையோ? அந்தப் பாலும் மாட்டின்

கெதிராகப் போராடிய கவிஞர் பாரதிதாசனை (அதே வேளை இவர் ஒரு முதலாளித்துவ கவிஞர் என்பதையும் மறந்துவிட வேண்டாம்) தலையில் வைத்துக் கொண்டாடும் விடுதலைக் கும்பல் இலங்கையில் தீண்டாமையை ஆதரித்து நிற்பது ஏன்? அவர்களுடைய விடுதலை பெற்ற ஈழத்தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு விடுதலை இல்லையோ?

தமிழர்களின் தணிப்பெரும் கட்சி என கூறப்படும் தமிழரசுக் கட்சியோ ஒன்றும் தெரியாதது போல் தீக்கோழி வேஷம் போடுகிறது. அதன் தலைவர் செல்வநாயகத்தின் தொகுதியிலுள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் இவ்வளவும் நடந்தும் காற்சட்டை

சும்மா பார்த்துக்கொண்டு நிற்கவேண்டுமாம்.

தமிழ் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் முன்னெப்போதும் இல்லாத வகையில் இன்று தமிழ் மக்கள் மத்தியிலும், இலங்கை எங்கிலுமுள்ள சகல முற்போக்காளர் மத்தியிலும் அம்பலப்பட்டு நிற்கிருர்கள். இவர்களைப் பற்றித் தாழ்த்தப்பட்ட மக்கள் உறுதியான பாடம் ஒன்றைப் படித்து விட்டார்கள். சுந்தரலிங்கத்தின் ஈழத் தமிழர் விடுதலை இயக்கம், செல்வநாயகத்தின் தமிழரசு கட்சி, பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் ஆகிய எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களை தமிழராக ஏற்றுக்கொள்ளவில்லை. இக் கட்சிகள் சகல தமிழருக்காகவும் போராடும் கட்சிகளல்ல; தமி

பலத்தில் மட்டுமே நம்பிக்கை வைத்துப் போராடுவதால் மட்டுமே பிரயோசனமுண்டு என்பதையும் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். சமாதானமாக ஆலயப் பிரவேசம் செய்ய முயற்சித்தவர்களைக் குண்டர்கள் பலாத்காரமாகத் தடுத்து நிறுத்தியபோதும், மாவிட்டபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் கள்ளுக் கொட்டில்கள் தீக்கிரையான போதும் பலாத்காரம் எங்கிருந்து வருகிறது என்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள். ஆகவே, கட்டவிழ்த்து விடப்படும் பலாத்காரத்திற்கு முன் வேள்விக்குப் போகும் ஆட்டுக்கிடாய்போல் நிற்க தாழ்த்தப்பட்ட மக்கள் தயாராயில்லை. தம்மைப் பாதுகாத்துக்கொள்ள உயர்சாதியினரின் பலாத்காரத்தை புரட்சிகரப் பலாத்காரத்தால் எதிர்க்க

## ★ வீச்சமடிக்கும் மனதை வெளியேகாட்டும் சுந்தரர்

புனிதம் கெட்டுப்போகும் என்று நாக்கூசாமல் கூறியிருக்கிருர்; சுந்தரலிங்கப் பேர்வழி. இயற்கையின் உபாதைக்கு மாதந்தோறும் உள்ளாகும் தாய்மார்களையும் மானம் ஈனமின்றி இந்தப் பிரச்சினையில் உதாரணம் காட்டி ''வம்புக்கு'' இழுத்துள்ளார் வரண்டுபோன சுந்தாரர். அம்மட்டல்ல, தீட்டுப்பட்ட உயர் சாதிப் பெண்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் சமப்படுத்தியிருக்கிறது. முன்னுள் கணித மேதையும், இந்நாள் அரசியல் மேதையுமான அநாகரிகம்.

இந்த அநாகரிகத்தின் பேட்டியை வாசித்து விட்டு ஒரு தாழ்த்தப்பட்ட நண்பர் என்னிடம் பின் வருமாறு சொன்ஞர்: தீண்டமை மட்டுமல்ல, மூளை வரண்ட இந்த அநாகரிகமும் மனித வர்க்கத்தின் ஒரு சாபக்கேடு. இதற்கு ''செருப்புப் பூசை நடத்த வேணும்'' இப்படிக் கூறிய நண்பரின் ஆத்திரத்தை என்னுல் புரிந்து கொள்ள முடிந்தது.

ஊனந்தானே? அந்தப் பாலுக்குப் போடப்படும் சீனி மாட்டெலும்பிஞல்தானே சுத்தம் செய்யப்படுகிறது? அப்போ இவர்களும் கோயிலுக்குள் போகக்கூடாதல்லவோ? என்ன காணும் டுப் விடுகிறீர்!

ஒரு முறை முக்கியமான விருந்தினர் ஒருவர் சுந்தரலிங்கத்தைச் சந்திக்க அவர் வீட்டுக்குச் சென்ருராம். அவர் மாட்டிறைச்சி தின்பவர் என்பதால் அவரை வீட்டுக்குள் அழையாமல் முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ்வைத்து ''உபசரித்து'' அனுப்பினுராம் மெத்தப் பெருமையோடு இதனை தினகரன் நிருபருக்குச் சொல்லியிருக்கிருர் சுந்தரலிங்கம். இவ்வளவு நாளும் ''வந்தாரை வரவேற்று வாரி வழங்கி உபசரிப்பதுதான் தமிழர் பண்பாடு'' என்று மேடைகளில் தலைவர்களும் தமிழ் ''அறிஞர்களும்'' தமிழன் ''பெருமை''யைப் பற்றி முழக்கம் செய்யப்பட்டதைக் கேட்டிருக்கிருேம். ஆனுல் இப்போது வந்தாரை

காந்தி கண்ணை மூடிக்கொண்டிருக்கிருர். இந்தியாவில் காந்தியார் தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்குள் விட வேண்டும் என்று போராடியதாக இவர்களே ''காந்தி விழாக்களில்'' பெரும் பறையடித்த துண்டு. ஆனுல் ஈழத்துக் காந்தியோ தாழ்த்தப்பட்ட மக்கள் போராடும் போது கருவாக் காட்டுக்குள் குந்தியிருந்து ஒளித்து விளையாடுகிருர். இவருடைய வளர்ப்பு மகன் சோப்பாய் எம். பி. கதிரவேற்பிள்ளையோ ''சுந்தரலிங்கத்தைத் தலைவராகக் கொண்ட குண்டர்

ழர் மத்தியிலுள்ள உயர்சாதி நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ வர்க்கங்களுக்காக மட்டுமே போராடும் கட்சிகள், இந்தவர்க்கங்களை எதிர்த்துப் போராடுகின்ற கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் தான் உரிமைகள் மறுக்கப்பட்ட, அடக்கியொடுக்கப்பட்ட தமக்காகப் போராடுகிறது என்பதைத் தெட்டத் தெளிவாகத் தெரிந்து கொண்டு விட்டார்கள்.

சட்டரீதியாக ஆலயப் பிரவேசம் செய்ய முயற்சிப்பவர்

வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிருர்கள்.

சுந்தரலிங்கமும், அவருடைய ஆட்களும், கோயில் குருக்களும் தேய்ந்து வரும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகள். தாழ்த்தப்பட்ட மக்கள் வளர்ந்தவரும் உழைப்பாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் வளர்ந்துவரும் வர்க்கம் வெற்றி பெறுவதும் தேய்ந்து போகும் வர்க்கம் தோல்வியடைவதும் தவிர்க்க முடியாத வரலாற்று நியதி. நெருப்புடன் விளையாடும் இந்தப் பிற்போக்குவாதிகள் வெந்து நீருகி விடுவார்கள்.

---

## 1952-ல்

## மாவைக் கந்தனின் சேவல் கொடி பறக்க வேண்டிய கோபுரத்தில் செல்வநாயகத்தின் ஆவல் கொடியை பறக்கவிட்டார் மாவிட்டபுரக் குருக்கள்

உலக வலம்
உஸ்மான்

# திரிபுவாதிகளின் முதலாளித்துவப் பாட்டு

## ◎ சோவியத்தில் பெருகியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம்

## ◎ சுரண்டலுக்கு ஆர்வம் காட்டும் சோவியத் அதிகாரி

## ◎ காமரஸ அறிஞர் அண்ணாதுரையின் "அருள் மொழி"

## ◎ ஆங்கிலத்திற்கு ஆராத்தி எடுக்கும் காரணம்

சர்வதேச கம்யூனிஸ அரங்கிலே மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகள் திரிபுவாதிகளைக் கண்டிக்கத் தொடங்கிய காலமுதல் தொடர்ந்து கூறிவரும் விஷயம் ஒன்றுண்டு. அதுவே சோவியத் யூனியனிலும் அதன் ,'தலைமையிலுள்ள வேறு சில நாடுகளிலும் (யுகோஸ்லாவியாவில் இது ஏறத்தாழ முடிவடைந்து விட்டது) முதலாளித்துவ மீட்சியாகும். பொருளாதார அடிப்படையில் முதலாளித்துவப் போக்கு இந் நாடுகளில் இருப்பதினாலேயே ஏகாதிபத்தியத்துடன் இணங்கியும் கைகோத்தும் திரிபுவாதம் செல்ல முடிகிறது. சோவியந் கைத்தொழில்களில் லாப நோக்கைப் புகுத்தியிருப்பது முதலாளித்துவ மீட்சியின் சின்னமாகும்.

முதலாளித்துவத்தின் கீழ் இரு முக்கியமான விஷயங்கள் நடைபெறுகின்றன; முதலாளிகள், முதலாளித்துவ வர்க்க ஏஜெண்டுகள் மேலும் மேலும் பணக்காரர் ஆகின்றனர்; ஈவிரக்கமின்றிச் சுரண்டுகின்றனர். தொழிலாளர், விவசாயிகள். முதலானோர் மேலும் மேலும் வறுமைப்படுகின்றனர்; படுமோசமான முறையில் சுரண்டப்படுகின்றனர். முதலாளித்துவத்தின் வெளித்தோற்றங்கள் வேறு பல இருப்பினும் இவ்விரண்டுமே அதனைத் தெளிவாக இனங்காட்டுகின்றன. முதலாளித்துவத்தின் உரைகல் இவை.

கடந்த சில வருடங்களாகச் சோவியத் யூனியனிலே இவ்விரண்டும் தாராளமாகக் காணப்பட்டு வந்துள்ளன; மேற்கு ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் அளவுக்கு இன்னும் வராது விடினும், போக்கைச் சந்தேகத்துக்கு இடமின்றிக் காணக்கூடியதாக உள்ளது, அண்மையில் மேலும் ஓர் உதாரணம் கண்டேன். முதலாளித்துவ நாடுகளில் இருப்பது போல, சோவியத் யூனியனின் முக்கிய நகரங்களிலே இப்பொழுது வேலைப் பதிவுக் கந்தோர்கள் (Employmen Exchange) திறக்கப்பட்டுள்ளன.

இது சில்லறை விளையாட்டல்ல. பாரதூரமானது. பல செய்திகளை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். முதலாவது, இதர கிழக்கு ஐரோப்பிய தேசங்களிலே தலையெடுத்திருப்பது போல, ரஷ்யாவிலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவுக்கு வளர்ந்துள்ளது என்பது தெரிகிறது. வேலையில்லாதோர்தானே வேலைக்குப் பதிவு செய்ய வேண்டும்! இரண்டாவது, வேலையில்லாதோரை ''மலிவாக'' வாங்கும் போக்கும் தோன்றியுள்ளது. அதாவது, குறைவாக ஊதியத்திற்கும் பணி புரிய பல தொழிலாளர் நிர்ப்பந்திக்கப்படுவர்; படுகின்றனர். மூன்றாவது, சோஷலிஸ்டு நாட்டில் தொழிலும், தொழில் வாய்ப்பும் ஏலம் போகிறது. நான்காவது, திட்டமில்லாத, எடுப்பார் கைப்பிள்ளையான பொருளாதாரம் வளருகின்றது. இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முதலாளித்துவத்தின் மிகச் சீர்கேடான தொழிலாளர் அவலம், அதாவது பாதுகாப்பின்மை, வேலையின்மை ஆகியன முதலாவது சோஷலிஸ நாட்டில்-லெனின் பிறந்த பொன்னாட்டில் ஏற்பட்டுள்ளது என்பதுதான்.

சமீபத்தில் சோவியத் பத்திரிகைகளே சிற்சில ஊழல்களை (அடிப்படைத் தத்துவத்தை அல்ல) முதலாளித்துவ பத்திரிகைப்பாணியில் அம்பலப்படுத்தியுள்ளன. டொனெற்ஸ் பிரதேசத்துத் தொழிற்சாலையொன்றின் கதை; ஒரு பானைச் சோற்றுக்கு அதுவே பதமாகிறது, கிரிவெங்கோ என்ற தொழிற்சாலை அதிபர் பல தொழிலாளரின் பெயர்களைச் சும்மா சம்பளப்பட்டியலில் போட்டான்; கற்பனைப் பெயர்கள்தான். உள்ள தொழிலாளரையும் வேலை வாங்கினான். மாத முடிவில் சுமார் இருநூறு ரூபிள் அவன் பையில் சென்றது. பொய்க் கையெழுத்துப் போடுவோனுக்கு ஒரு முப்பது ரூபிள் இனாம்! சாதாரண இலங்கைச் சாய்ப்புக்கடைகளில்கூட இவ்வளவு மோசமான பச்சை சுரண்டல் நடக்குமோ என்பது சந்தேகம். இது தான் குருஷ்சோவ் காட்டிய ''கம்யூனிஸ'' பாதை போலும்.

இந்த லட்சணத்தில், சமீப காலங்களில் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் பிரயாணஞ் செய்யும் சோவியத் அதிகாரிகள், தொழில் நிலைய நிர்வாகிகள் முதலியோர், மார்க்சிஸ்டுகள் கண்டு கேட்டறியாத ''பாஷையைப்'' பேசுவதில் வியப்பு ஒன்றுமில்லை. இந்தியாவில் எச். வி. ஆர். ஐயங்கார் என்பவர் படுபிற்போக்கு கட்சியான சுதந்திரக்கட்சி பேர்வழி. இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து இளைப்பாறிய இப் பொருளாதாரப் ''புலி'' சுதந்திராவின் ''தங்க மூளை''களில் ஒன்று. இந்தியன் எக்ஸ்பிரஸ் (தமிழில் தினமணி) பத்திரிகாலய வெளியீடுகளில் அதி தீவிர வலதுசாரி அரசியல் பற்றியும், அதற்கிணையான பொருளாதார அமைப்புப் பற்றியும் அடிக்கடி மாரடிக்கும் ஐயங்கார் அமெரிக்கதாசன். இவர் சில தினங்களுக்கு முன் பின்வருமாறு ஒரு கட்டுரையில் எழுதினார்:

''இந்தியா பற்றி ஒரேயொரு விஷயம் எனக்கு வருத்தத்தை தந்தது, அரசாங்கத் துறைத் தொழில்கள் நன்றாகவும், திறமையாகவும் நடைபெறுவதில்லை. தனியார்துறையில் தொழில்கள் திறமையாக நடைபெறுகின்றன; இவ்வாறிருக்கவும் தனியார்துறைத் தொழில்களுக்கு அரசாங்கம் உதவியும் போதிய உற்சாகமும் அளிக்காதிருப்பது ஏனோ தெரியவில்லை. இது எனக்கு விளங்கவே யில்லை. இவ்வாறு எனக்ருக் கூறியவர் ஒரு சோவியத் அரசாங்க அதிகாரி; பொறுப்பான ஒரு பதவியில் இருப்பவர். அவர் இவ்வாறு கூறியது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. பலவற்றையும் நுணுக்கமாகக் கதைத்த அவர் சொன்னார்; தனியார் துறையானது பயனுள்ள முறையில் நடைபெற்று வெற்றி கண்டிருக்கிறது. இந்த நிலைமையில் ஏன் அந்தத் துறைக்கு அரசாங்கம் சிறிது அதிக சுதந்திரம் கொடுக்கக் கூடாது''

எச். வி. ஆர். ஐயங்கார் பழுத்த தனியார்துறைவாதி. வங்கியிலிருந்து இளைப்பாறிய பின், இந்திய அரசாங்கம் நடத்தும் ''வர்த்தகம் வியாபாரம், தொழில்'' இலாகாவில் முக்கிய உத்தியோகத்தராகவும் பின்னர், இந்தியக் கைத்தொழிற் கம்பெனிகள் பலவற்றின் மனேஜிங் டைரக்டராகவும் இருந்தவர். அவருக்கு ரஷ்ய அதிகாரி தனியார் துறையின் சிறப்புப் பற்றி வற்புறுத்துவது புதுமைதான்.

முதலாளித்துவ நாட்டில் தொழில் நிறுவனங்களையும்—பிறநிலையங்களையும் தேசியமயமாக்கும் குரலுக்கு எதிர்ப்பாக முதலாளித்துவ ஊதுகுழல்களும் ''மேதாவிகளும்'' அரசாங்க முயற்சிகள் சரிவர நடைபெறமாட்டா என்றும், திறமையாக இயங்க மாட்டா என்றும் தொண்டை கிழியக் கத்துவதுண்டு. அந்தத் திருப்பணியை இப்பொழுது சோவியத் ஊதுகுழல்கள் செய்யத் தொடங்கியுள்ளன. உள்ளூர்த் திரிபுவாதச் சீடர்களும் இலங்கையில் தனியார்துறைக்கு ஊக்கம் கொடுக்கும் ஆலோசனைகளைக் கூறினால் இனி ஆச்சரியப் படவேண்டாம்.

◎

தமிழ், தமிழினம், தமிழ்மொழி, தமிழர் பண்பாடு என்பன போன்ற சொற்களை உரக்கக் கூவிக்கொண்டு தமிழ் முதலாளித்துவம் தனது லாப நோக்கைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்வதற்கு ஏற்ற அரசியல் மூடுதிரையே தி. மு. க. என்று நாம் பல தடவை எடுத்துக் காட்டியுள்ளோம். தம்பி கருணாநிதியிலிருந்து தளர்பதி அமிர்தலிங்கம் ஈறாக இனவாதம் பேசுபவர் அரசியல் விபச்சாரிகள் என்பதையும் மெல்ல மெல்ல தமிழ் உலகம் கண்டு வருகிறது.

ஆனாலும் அடிமைப் புத்தி இலகுவில் அகன்று விடுமா? வர்க்க அடிப்படையைக் கண்டாலன்றி தி. மு. க. தமிழரசார், தமிழ்காங்கிரஸ், தொண்டமான் கும்பல் முதலியவற்றின் ஏகாதிபத்தியச் சார்பையும், துரோக புத்தியையும் நன்கு புரிந்து கொள்ள இயலாது. தமிழ் அன்னை என்று ''தாயைப்பெண்டாளும்'' தனயரான தி. மு. கவினர் தொடர்ந்து ஆங்கிலத்திற்கு அளிக்கும் முக்கியத்துவம் ஏகாதிபத்திய அடிவருடுந் தன்மையையே காட்டுகிறது. சமீபத்தில் அண்ணாத்துரை முதலியார் பின்வருமாறு மொழிந்துள்ளார்.

''ஆங்கிலத்தைப் புறக்கணிக்க வேண்டுமென்ற வாதம் பொருளற்றது. உலகத் தொடர்புக்கு ஆங்கிலப் புலமை இன்றியமையாதது. வெளிநாட்டினர் - குறிப்பாக அமெரிக்கர் இந்தியாவிலேயே தமிழைத்தான் விரும்புகிறார்கள். காரணம் இங்குதான் ஆங்கிலம் பேசப்படுகிறது. மற்றைய மாநிலங்களில் ஆங்கிலத்தைக் காரணமில்லாமல் ஒதுக்கித் தள்ளுகிறார்கள். ஆகவே, தமிழகத்திலே தொழில்கள் ஆரம்பிக்க வெளிநாட்டினர் விரும்புகிறார்கள். இதற்கு இந்திய அரசு ஊக்கமளிக்க வேண்டும்''

காமரஸ அறிஞர் அண்ணாத்துரையின் குரலுக்குப் பின்னால் ஏகாதிபத்தியச் சார்பான தென்னிந்திய முதலாளிகளின் இசைத்தட்டு இருக்கிறது. முதலாளித்துவ வெளியுலகத்துடன் இலகுவில் தொடர்பு கொள்ள வசதியாகவும், அமெரிக்க முதலாளித்துவத்திற்கு நிலபாவாடை விரித்து, வெற்றிலை மடித்துக் கொடுத்து (அண்ணாத்துரை, கருணாநிதி அண்ட் கோ பாஷையில் மஞ்சத்திற்கு அழைக்கவும்) உறவாடவும் ஆங்கிலம் தேவைப்படுகிறது. இதுதான் அண்ணாத்துரையின் பேச்சு. மூன்று கோடி தமிழ் மக்களைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு ஆங்கிலம் உகந்ததா; அவர்களுக்கு எத்தகைய உலகத் தொடர்பு வேண்டும்? இவை குறித்துப் பேச்சு மூச்சு இல்லை. எப்படி இருக்கும்? அண்ணாத்துரைக்கு ''உலகத் தொடர்பு'' என்பது, அமெரிக்கா, ஜப்பான், 'மலேஷியா' தென்கொரியா, தென் வியட்னாம் போன்ற நாடுகளுடன் காணும் தொடர்பே. அதனையே மக்கள் மீதும் திணிக்க நினைக்கிறார்.

ஆனால், மெல்ல மெல்ல இந்தியாவெங்கும் எதிரொலிக்கும் நக்ஸல்பாரி நோக்கு இறுதியில் போலிமேடை வீரரான கருணாநிதி கம்பெனியையும் காட்டு வெள்ளம்போல் அடித்துக் கொண்டு போவது உறுதி. அதற்கு முன் தமிழை உச்சரித்துக் கொண்டு பிடுங்கினது லாபம்தானே!

வாசியுங்கள்
RED FLAG
ஆங்கில வார ஏடு
விலை சதம் 15
விபரங்களுக்கு:-
121. யூனியன் பிளேஸ்
கொழும்பு-2

# மா சே - துங் சிந்த

# இந்தோனேசிய கம்யூனி



**இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 48 வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியினது மத்திய கமிட்டியின் தூதுக்குழு விடுத்துள்ள அறிக்கை.**

1968ம் ஆண்டு மே மாதம் 29ந் தேதியுடன் எமது மதிப்பிற்கும் அன்பிற்கு முரிய இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டு 48 வருடங்கள் பூர்த்தியாகின்றன. சுகார்ட்டோ—நசூதியன் இராணுவ பாசிஸ ஆட்சியினர் நடத்தும் சித்திரவதைகளையும், கொடூரமான துன்புறுத்தல்களையும் தாங்கியபடி இந்தப் பாசிஸ ஆட்சியினருக்கு எதிராக இந்தோனேசியக் கம்யூனிஸ்டுகளும் ஏனைய புரட்சிகர மக்களும் அணைக்க முடியாத உணர்வுடன் சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியபடியும், கிராமப் புறங்களிலும் மலைகளிலும், காடுகளிலும் ஆயுத மேந்திப் போரிட்ட படியும் இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த நாற்பத்தெட்டாவது வருட நிறைவு தினத்தைக் கொண்டாடுகின்றனர். பிற்போக்குவாதிகள் எவ்வளவுதான் மிருகத்தனமாகவும், மூர்க்கத்தனமாகவும் இருந்த போதிலும் அவர்களால் இந்தோனேசிய மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளும் புரட்சிகர மக்களும் தங்களது கட்சியின் நிறைவு விழாவைக் கொண்டாடுவதைத் தடுக்கமுடியாது. கொரில்லாப் போராட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, தமது போராட்ட உறுதியை மேலும் பலப்படுத்தி, விவசாயப் புரட்சியை உண்டாக்குவதற்கு விவசாய வெகுஜனங்களைக் கிளர்ந்தெழச் செய்து, நகரங்களைக் கைப்பற்றி தேசிய விடுதலையை வென்றெடுப்பதற்காகக் கிராமப் புறங்களிலிருந்து நகரங்களைச் சுற்றி வளைப்பதற்கு நீண்டநாள் ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஈடுபடுத்தி அவர்கள் கட்சியின் நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றனர்.

### தேசிய நலன்கள் பலி

இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 48வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும்போது எமக்கு முன்னுலுள்ள நீண்டநாள் போராட்டப் பாதை கரடுமுரடான தென்பதையும், கஷ்டங்கள் பலவற்றை ஏற்பதுடன் பல தியாகங்களையும் செய்ய வேண்டுமென்பதையும் நாம் அறிவோம். 1965 ஒக்டோபரில் ஆரம்பித்த மூர்க்கத்தனமான அட்டூழியங்களும் 1951-65 காலகட்டத்தில் இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி தனது கொள்கையில் விட்ட சந்தர்ப்பவாத — திரிபுவாதப் பிழைகளும் இந்தோனேசிய மக்களின் புரட்சிகர இயக்கத்திற்குப் பல கடுமையான அடிகளைக் கொடுத்தன. இதனுல் பல ஆயிரக்கணக்கான இந்தோனேசிய கம்யூனிஸ்டுகளையும் புரட்சிகர மக்களையும் தியாகஞ் செய்ய வேண்டி ஏற்பட்டது. அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள், சோவியத் நவீன திரிபுவாதிகள் ஆகியோரின் உதவியுடன் சுகார்ட்டோ-நசூதியன்பாசிஸ இராணுவ ஆட்சி இந்தோனேசிய மக்களின் மேல் நடத்தும் அடக்கு முறைகளையும், சுரண்டலையும் மேலும் துரிதப்படுத்தியுள்ளன. இந்தோனேசியப் பொருளாதாரத்தின் மீது ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டைத் திரும்பவும் ஏற்படுத்தி அதனைப் பலப்படுத்தியதுடன், இந்தோனேசிய மக்களின் தேசிய நலன்களையே அடகு வைத்து விட்டது. மாபெரும் மக்கள் சீன குடியரசின் செல்வாக்கையிட்டு அது அடைந்த அச்சத்தினுல் சீனுவுக்கு எதிராகவும், இந்தோனேசியாவிலுள்ள சீன மக்களுக்கு எதிராகவும் முன்னெப்போதும் கண்டிராத காட்டு மிராண்டித்தனமான வகுப்புவாத இயக்கத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தோனேசியப் புரட்சிகர மக்களும் தற்காலிகமாகப் பல துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள போதிலும் — தற்காலிகமாக எதிரி சற்றுப் பலமுள்ளவனுகவும் புரட்சிகர சக்திகள் சற்று சக்தியற்றிருந்த போதிலும்— எதிர்காலத்தை புரட்சிகர ஒளிமயத்துடன் நாம் காண்கிறேம்.

### ஆளும் பாசிஸ்ட் கும்பலுக்கு திரிபுவாதிகள் ஆதரவு

சென்ற வருடம் மே மாதம் 23ந் தேதி நாம் எமது கட்சியின் 47வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய போது, இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினது அரசியற் குழு விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறியது:

நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களைக் கொண்ட சீரழிந்து வரும் சமுதாய அடிப்படையில் இந்தோனேசிய எதிர்ப் புரட்சிகர சக்திகள் தங்கியுள்ளன. வெளிப் புறத்தில் இந்தோனேசிய எதிர்ப் புரட்சிகர சக்திகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தில் தங்கியுள்ளன. அத்துடன் சோவியத் யூனியன் திரிபுவாத முன்னணிக் கும்பலின் ஆதரவும் இவற்றிற்கு உண்டு, இவை கூட ஏதோ வலுவானவையல்ல; ஆட்டம் கண்டவை.''

### முக்கியமான பாடங்கள்

இக் கால கட்டத்திற்கு பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் சுகார்ட்டோ-நசூதியன்பாசிஸ இராணுவ ஆட்சி வெளியேற முடியாத, தினசரி வளர்ந்து வரும் இன்னல்களுக்குள் சிக்கியுள்ள தென்பதை வெளிப்படுத்தி யுள்ளன. இவர்கள் ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்தும், நவீன திரிபுவாதிகளிடமிருந்தும் தாம் பெற்றுக் கொள்ளும் சகல ''உதவிகளை'' கொண்டும் பொருளாதார, பணக் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ள முடியாது.

...னேசிய கம்யூனிஸ்ட் கட்சியினது அரசியல் குழுவின் சுயவிமர்சனத்தை'' வெளியிட்டு, கடந்த காலத்தில் கட்சி விட்ட அடிப்படைத் தவறுகளைத் திருத்திக் கொண்டது. இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியினதும், இந்தோனேசியப் புரட்சிகர மக்களினதும் அனுபவத்திலிருந்து பெற்றுக் கொண்ட பாடங்கள் இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இந்தோனேசியப் புரட்சிக்கும் மட்டும் முக்கியத்துவமுடையன வல்ல; உலகெங்கனுமுள்ள புரட்சிகர மக்களின் போராட்டங்களுக்கும் சர்வதேச கம்யூனிஸ இயக்கத்திற்கும் அப் பாடங்கள் முக்கிய மானவை. மா சே—துங் சிந்தனையிலிருந்து புரட்சி விலகும் போது அது தோல்வியடையும் என்பதை அவை மிகத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் நிரூபித்து விட்டன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணியை மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதிகளினுல் போதிக்கப்படும் திரிபுவாத ''சமாதான மாற்றப் பாதை சகல நாட்டினது மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் அழிவுப் பாதை என்பதையும் நிரூபித்துள்ளன.

# விடுதலைக்கான ஆயுதந்தாங்கிய

''இந்தோனேசியாவில் எதிர்ப் புரட்சிகர சக்திகளின் வெற்றியும், புரட்சிகர சக்திகளைவிட அவை சற்று வலுப் பெற்றதும் எதிர்ப் புரட்சிகர சக்திகள் வளர்ச்சி யடைந்து வருவதனுல் அல்ல, எமது கட்சியின் சந்தர்ப்பவாத திரிபுவாதப் பிழைகளினுல் இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கிய புரட்சிகர சக்திகளில் பாரதூரமான சீரழிவு ஏற்பட்டதினுலே யாகும். எதிர்ப் புரட்சிகர சக்திகள் இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியிலும் இந்தோனேசியப் புரட்சிகர இயக்கத்தின் மேலும் பல வலுவுள்ள அடிகளைக் கொடுப்பதற்கு வழிவகுத்தன. இந்தோனேசியாவில் எதிர்ப் புரட்சிகர சக்திகளின் வெற்றியும் அவை புரட்சிகர சக்திகளைவிட வலுப் பெற்றதும் தற்காலிகமானவை. உலக ரீதியில் எதிர்ப் புரட்சிகர சக்திகள் தமது வீழ்ச்சியை நோக்கி நடை போடுகையில் இவை நடைபெறுகின்றன. இந்தோனேசிய எதிர்ப் புரட்சிகர சக்திகளின் முதுகெலும்பு ஈடாட்டம் கண்டுள்ளது. உள்நாட்டைப் பொறுத்த வரையில், இந்தோனேசிய மக்களின் பரந்த வெகு ஜனங்களினுல் முற்ருக எதிர்க்கப்படும் அதிகாரத்திற்கும் இலாபத்திற்குமான போட்டியினுல் ஆட்சிக் கும்பலுக் கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மிகவும் வலுவடைந்துள்ளன. இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் எதிர்ப் புரட்சிகர சக்திகளின் ஆட்சியை எதிர்ப்பதற்கு இந்தோனேசிய மக்கள் ஆயுதந் தாங்கி போராட முற்பட்டதுதான் இவற்றில் மிக முக்கியமானது.

தோழர் மா சே-துங் பின்வருமாறு கூறுகின்ருர்: ''புரட்சி இருக்க வேண்டுமாயின் புரட்சிகரக் கட்சி ஒன்று இருந்தாக வேண்டும். புரட்சிகரக் கட்சி ஒன்று இல்லாமல், மார்க்சிஸ—லெனினிஸ புரட்சிகரத் தத்துவத்தின்படியும், மார்க்சிஸ—லெனினிஸ புரட்சிகரப் பாணியிலும் கட்டி எழுப்பப் பட்ட கட்சி ஒன்றில்லாமல் ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏவல் நாய்களையும் தோற்கடிப்பதில் தொழிலாளி வர்க்கத்திற்கும் பரந்த வெகு ஜனங்களுக்கும் தலைமை தாங்குவது அசாத்தியம்''

கடுமையான காலகட்டத்தில் ஒரு சிறிய காலத்திற்குள் 1966 செப்டம்பரில் இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி ''இந்தோ...

### மூன்று முக்கிய ஆயுதங்கள்

''இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியினது மத்தியக் கமிட்டியின் அரசியற் குழுவின் சுய விமர்சனம்'' எது வித மயக்கமுமின்றி மிகத் தெளிவாக பின்வருபவற்றை வலியுறுத்திற்று: ''அது தனது பூரண வெற்றியை அடைவதற்கு இந்தோனேசியப் புரட்சியும் சீனப் புரட்சியின் பாதையிலேயே செல்ல வேண்டும். சராம்சத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழான விவசாயிகளின் ஆயுதந் தரித்த விவசாயப் புரட்சியான—ஆயுதந் தரித்த எதிர்ப் புரட்சிக்கு எதிரான மக்களின் ஆயுதந் தரித்த போராட்டமான—முக்கிய போராட்ட முறையை இந்தோனேசியப் புரட்சியும் கைக் கொள்ள வேண்டும் என்பதாகும்.'' மார்க்சிஸம்—லெனினிஸம், மா சே-துங் சிந்தனை ஆகியவற்றிற்கு இணங்குபவையான—இந்தோனேசியப் புரட்சியை நெறிப்படுத்துவதில் முக்கிய பாத்திரம் வகிக்கும் மூன்று பதாகைகளை இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி

# ...ந்தனையின் வழிகாட்டலின் கீழ்

# ...ூனிஸ்ட் கட்சி கட்டி வளர்க்கப்படுகிறது

ஏற்றுள்ளது. இம் மூன்று பதாகைகளினால் இடப்பட்ட கடமைகளை நாம் இடைவிடாது செயற் படுத்துவதன் மூலம் இந்தோனேசியாவில் மக்களின் ஜனநாயகப் புரட்சியை வென்றெடுப்பதற்கான மூன்று முக்கிய ஆயுதங்களை நாம் பெற்றுக் கொள்வோம். முதலாவது, ஒரு மார்க்சிஸ—லெனினிஸ கட்சி-அதுவே புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் நடுமையமான சக்தி—இரண்டாவது, கட்சியின் தலைமையிலான மக்களின் ஆயுதப் படை-இதுவே புரட்சியின் முக்கிய அமைப்பு முறை-மூன்றாவது, கட்சியின் தலைமையயிலான புரட்சிகர ஐக்கிய முன்னணி—இந்தோனேசியாவிலுள்ள சகல புரட்சிகர சக்திகளையும் கொண்டது.

இந்தோனேசிய மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகள் தமது சொந்த அனுபவத்தின் மூலம், மா சே-துங் சிந்தனைதான் இந்தோனேசியப் புரட்சியை வழி நடத்தக் கூடிய மார்க்சிஸ—லெனினிஸக் கட்சியாக இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி வளர்க்கக் கூடிய ஒரேயொரு நெறிப்

கீழ் ஜாவா), சுமத்திரா, சுலவேசி போன்ற முக்கியமான தீவுகளில் ஆயுதப் போராட்ட ஜுவாலை கிளர்ந்தெரியத் தொடங்கிவிட்டது. சர்வாதிகார நிலப் பிரபுக்களையும் உள்ளூர் குண்டர்களையும் தண்டிப்பதற்காக மக்கள் தமது சொந்த ஆயுதப் படைகளை அமைக்கத் தொடங்கி விட்டனர். பலவிதப்பட்ட இடங்களைத் தாண்டிக் கொண்டு இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி தனது வேலையின் முக்கியத்துவத்தை நகரத்திலிருந்து கிராமத்துக்கு மாற்றத்தொடங்கியுள்ளது; சமாதானப் போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டத்துக்கும், சட்டரீதியான வேலையிலிருந்து சட்டரீதியற்ற வேலைக்கும், வெளிப்படையான வேலையிலிருந்து தலைமறைவான வேலைக்கும் முக்கியத்துவத்தை மாற்றியுள்ளது. மா சே-துங் சிந்தனையின் வழி நடத்தலின் கீழ், தற்போது கட்சி கட்டி வளர்ப்பதற்குக் கடைப்பிடிக்கப்படும் கொள்கைக் கிணங்க, அதாவது, ஆயுதப் போராட்டத்துக்கு வசதியளிக்கும், கிராமப் புறங்களிலும் தலைமறைவு வேலையை

சே-துங் சிந்தனையை நாம் மிகச் சிரத்தையுடன் படித்து அவற்றில் ஆழ்ந்த புலமை பெற்று அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்''

### மாபெரும் கலாச்சாரப் புரட்சியின் சாதனைகள்

இந்தோனேசியப் புரட்சிக்கும் உலகப் புரட்சிக்கும் சர்வதேசிய நிலைமைகள் வெகு சாதகமாயுள்ள இக் காலகட்டத்தில், இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 48 வது வருடாந்த நினைவு விழாவை நாம் கொண்டாடுகிறோம். சகல துறைகளிலும் வெற்றி பெற்றுள்ள சீனத்தின் மாபெரும் பாட்டாளிவர்க்கக் கலாச்சாரப் புரட்சி பிரமாண்டமான உலக முக்கியத்துவமுடையதாகும். மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி சீனத்தை மா சே-துங் சிந்தனையின் மாபெரும் பாடசாலையாக மாற்றியுள்ளது. மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போது புரட்சியின் சகல எதிரிகளையும் எதிர்ப்பதற்கான மிகவும் சக்தி வாய்ந்த தத்துவார்த்த ஆயுதமான மா சே-துங் சிந்தனையைக்

டத்தின் வெற்றிப் பதாகையாக மாற்றியுள்ளது.

### சர்வதேச புரட்சிகரப் போராட்டம் முன்னேறுகிறது

தோழர் அன்வர் ஹோஜாவினதும் அல்பேனியத் தொழிலாளர் கட்சியினதும், மார்க்சிஸ—லெனினிஸக் கட்சித் தலைமையின்கீழ் உள்ள அல்பேனிய மக்கள் குடியரசு, ஏகாதிபத்தியத்துக்கும் நவீன திரிபுவாதத்துக்கும் எதிரான வலுவுள்ள அரணாகவும் ஐரோப்பாவின் சோஷலிஸ ஒளிவிளக்காகவும் திகழ்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலுள்ள ஏகாதிபத்தியத்துக் கெதிராகவும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணிக்கும்பலை மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதத்துக் கெதிராகவும், சகல பிற்போக்குச் சக்திகளுக் கெதிராகவும் பல்வேறு நாடுகளிலுமுள்ள மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நிர்மூலமாக்குவதற்கும், வட

விழாவின் போது இந்தோனேசிய கம்யூனிஸ்ட்டுகளும் இந்தோனேசிய புரட்சிகர மக்களும், இந்தோனேசிய மக்கள் நடாத்தும் புரட்சிகரப் போராட்டத்துக்கு மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளும், சகல, நாட்டுப் புரட்சிகர மக்களும் அளிக்கும் சர்வதேச உதவிக்காக அவர்களுக்குத் தமது நன்றியையும் ஆழ்ந்த மதிப்பையும் தெரிவிக்கின்றனர்.

மா சே-துங் சிந்தனையின் மாபெரும் செம்பதாகையின் கீழ் இறுக்கமாக ஐக்கியப்பட்டு இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தோனேசிய மக்களை, மக்கள் யுத்தப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதுடன் வெற்றியையடைவதற்குச் சகல இடங்களையும் தாண்டிச் செல்லும்.

இந்தோனேசியப் புரட்சிகர மக்களின் ஆயுதப் போராட்டம் நீடூழி வாழ்க!

# ...ங்கிய புரட்சிகர போராட்டம் சுவாலைவிட்டு எரிகிறது

படுத்தும் தத்துவார்த்தமெனக் கொள்கின்றனர். 1967 மே மாதம் 23-ந் தேதி இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினது அரசியற் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் ''இந்தோனேசிய மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகள் மா சே-துங் சிந்தனையை தற்கால சகாப்தத்தின் சிகரமென எதுவிதத் தயக்கமுமின்றி ஏற்றுக் கொள்கின்றனர். அதனைப் பற்றிப் பிடித்து தோழர் மா சே-துங் காட்டிய மக்கள் யுத்தப் பாதையில் செல்ல வேண்டிய இந்தோனேசியாவின் விடுதலைக்கான போராட்டத்திற்கு உறுதியான ஆயுதமாகப் பாவிப்பதென திட்டம் கொண்டுள்ளனர்''

### மா சே துங் சிந்தனையை சிரத்தையுடன் கற்க வேண்டும்

தற்போது, இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் இந்தோனேஷிய மக்கள் ஆயுதமேந்திய போராட்டப் பாதையில் இறங்கியுள்ளனர். கலிமன்ரான் (சிறப்பாக மேற்கு கலிமன்ரான்), ஜாவா (சிறப்பாக

வலியுறுத்தும் கட்சி கட்டி வளர்க்கும் கொள்கைக்கிணங்க இந்தோனேசியாவில் உள்ள மார்க்சிஸ்ட் — லெனினிஸ்ட்டுகள் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியைத் திரும்பவும் கட்டி வர்ளக்கின்றனர்.

இந்தோனேசியப் புரட்சியை வழிநடத்தக்கூடிய மார்க்சிஸ—லெனினிஸக் கட்சியாக இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி வளர்ப்பதற்கு, சந்தர்ப்பவாத, திரிபுவாதப் பிழைகளின் எச்சசொச்சங்களைப் பூரணமாக நாம் தொடர்ந்தும் நிர்மூலமாக்க வேண்டும். அவற்றின் தத்துவார்த்த முளைகளைக் களைந்தெறிவதுடன் அவை வளர்வதற்கான சூழ்நிலைகளை அழித்தொழிக்க வேண்டும். தனிநபர் தத்துவார்த்தத்தை அழித்தொழிப்பதுடன் கட்சியினதும் மக்களினதும் நலன்களுக்காகத் தியாகங்கள் செய்யத் தயாராகவுள்ள உணர்வை வளர்த்தெடுக்கவேண்டும். இவற்றுக்காக, இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 47-வது வருடப் பூர்த்தி விழாவை முன்னிட்டு அரசியற் குழுவினால் விடுக்கப்பட்ட அறிக்கை சுட்டிக்காட்டியவாறு, ''மார்க்சிஸம்—லெனினிஸத்தை, மா

கோடிக்கணக்கான சீன மக்கள் படித்து, கிரகித்ததுடன் அதை நடைமுறைப் படுத்தியுமுள்ளனர். மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் வெற்றி உலகப் புரட்சியின் சக்தி வாய்ந்த அரணாகவுள்ள சீனத்தை என்றென்றும் செந்நிறமாக வைத்திருப்பதற்கு உறுதியளித்துள்ளது. மாபெரும் தலைவர் மாசே-துங்கினதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் நேரடித் தலைமையின் கீழ் சீன மக்களினால் வென்றெடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மாபெரும் வெற்றி, அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமை தாங்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணிக் கும்பலின் தலைமையிலுள்ள நவீன திரிபுவாதிகளுக்கும் சுகார்ட்டோ-நசூதியன் துரோகக் கும்பல் உட்பட உலகிலுள்ள சகல பிற்போக்குவாதிகளுக்கும் மரண அடி கொடுத்துள்ளது. மா சே-துங் சிந்தனையின் மாபெரும் செம்பதாகையை உயர்த்திப் பிடித்த மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி மா சே-துங் சிந்தனையை உலகப் புரட்சிகர மக்களின் போராட்

வியட்நாமைப் பாதுகாப்பதற்கும் தென் வியட்நாமை விடுதலை செய்து தமது தந்தையர் நாட்டைத் திரும்பவும் ஐக்கியப் படுத்துவதற்கும் வியட்நாமியர்கள் தாம் நடாத்தும் கீர்த்திமிக்க போராட்டத்தில் வெற்றிமேல் வெற்றி பெற்று வீரவாகை சூடி வருகின்றனர். பல்வேறு நாடுகளிலுள்ள மக்கள் தமது புரட்சிகரப் போராட்டத்தில் பெற்றுக் கொள்ளும் வெற்றிகளும் சாதனைகளும் சுகார்ட்டோ—நசூதியன் பாசிஸ இராணுவ சர்வாதிகார ஆட்சியை நிர்மூலமாக்க இந்தோனேசிய மக்கள் நடாத்தும் போராட்டத்துக்கு நேரடி உதவி அளிப்பனவாகும்.

இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 48 வருடப் பூர்த்தி

சுகார்ட்டோ—நசூதியன் பாசிஸ—இராணுவ ஆட்சி வீழ்க!

மாபெரும் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி நீடூழி வாழ்க!

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் நீடூழி வாழ்க!

மார்க்சிஸம்—லெனினிஸம் மா சே-துங் சிந்தனை நீடூழி வாழ்க!

எமது காலகட்டத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட்டும் உலகப் புரட்சிகர மக்களின் மதிப்புக்கும் அன்புக்குமுரிய தலைவர் மா சே-துங் நீடூழி வாழ்க!

### மாசே - துங் சிந்தனை

எமது நிலை தொழிலாளி வர்க்கத்தினுடையதும் வெகு ஜனங்களுடையதுமே. கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களுக்கு இதன் அர்த்தம், கட்சியின் நிலையோடு நிற்பது, கட்சி உணர்வோடும் கட்சிக் கொள்கையோடும் ஒட்டி நிற்பது என்பதாகும்.

# கம்யூனிஸ்ட் புரட்சிவாதிகளின் அகில இந்திய இணைப்புக் கமிட்டியின் பிரகடனம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யினது புரட்சிவாதிகளின் அகில இந்திய இணைப்புக் கமிட்டி நக்ஸல்பாரி விவசாய கிளர்ச்சியின் முதலாவது ஆண்டு நிறைவுறும் வேளையில் கூடியது. ஆறு மாதங்களுக்கு முன் அதன் முதலாவது கூட்டம் நடைபெற்றதன் பின் ஏற்பட்டுள்ள நிலைமைகளை ஆராய்ந்தது. நிலைமை மாறியதன் காரணமாக புதிய பிரகடனம் ஒன்றை வெளியிடுவதெனவும், அதன் பெயரை கம்யூனிஸ்ட் புரட்சிவாதிகளின் அகில இந்திய இணைப்புக் கமிட்டி என்று மாற்றுவதெனவும் கமிட்டி முடிவு செய்தது. அப் பிரகடனம் வருமாறு:

## மாசே-துங் சிந்தனையின் செம்பதாகையின் கீழ் அணிதிரள்வோம்

ஒரு வருடத்திற்கு சற்றுமுன் இந்தியா முழுவதிலும் வெடித்த பூகம்பம் இந்தியாவின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியதை உலகுக்கு வெளிப்படுத்தியது. மார்க்சிஸம்— லெனினிஸத்தினுலும் தலைவர் மாஓவினுலும் கவரப்பட்டு கம்யூனிஸ்ட் புரட்சிவாதிகளின் தலைமையில் நக்ஸல்பாரியின் வீரமிக்க விவசாயிகள் தம்மைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிய ஆயுதந் தாங்கி கிளர்ந்தெழுந்தனர். வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் சகல திரிபுவாதிகளும் கடைப்பிடித்த பாராளுமன்றப் பாதையின் பங்கலோட்டுத்தனத்தை அவர்கள் மறுபடியும் அம்பலப்படுத்தினர். அன்று தொட்டு நக்ஸல்பாரியின் செய்தி—தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் விவசாயிகளின் ஆயுதந் தாங்கிய போராட்டம் என்ற செய்தி—இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரவிவிட்டது. அதன் செல்வாக்கின்கீழ் நாட்டின் பல பாகங்களிலும் எண்ணிலடங்காத விவசாயப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பிவிட்டன. இக் கிளர்ச்சிகள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும் சோவியத் திரிபுவாதிகளையும் இந்தியாவின் பெரும் நிலப்பிரபுக்களையும், ஏகாதிபத்திய சார்பு—அதிகார வர்க்க முதலாளி வர்க்கத்தினரையும், அவர்களின் அடிவருடிகளான டாங்கே துரோகக் கும்பலையும் புதிய திரிபுவாதிகளையும் கதிகலங்கச் செய்துள்ளன. இந்தியாவின் உழைக்கும் மக்களும் கட்சி சார்பற்ற முறையில் சகல புரட்சிவாதிகளும் இக் கிளர்ச்சிகளைப் புளகாங்கிதத்துடனும், ஆர்வத்துடனும் வரவேற்றுப் புகழ்ந்துள்ளனர். இவர்களுக்கு நக்ஸல்பாரி ஒரு பாதையைக் காட்டுகிறது. அது தலைவர் மாஓவின் சிந்தனையின் ஒளியால் பிரகாசிக்கின்ற பாதை, அது, உலகின் காலனி, அரைக் காலனி மக்களின் விமோசனப் பாதை; மகத்தான சீனப் புரட்சியின் வெற்றிக்கு வழி கோலிய பாதை.

இருபது வருடங்களுக்குச் சற்று முன்பதாக பிரிட்டனின் காலனியாக இருந்த இந்தியா இன்று பல ஏகாதிபத்திய வல்லரசுகளின் நவீன—காலனி நாடாகிவிட்டது. இவற்றில் முதன்மை ஸ்தானத்தை அமெரிக்காவும், சோவியத் யூனியனும் வகிக்கின்றன. மனித வர்க்கம் முழுவதினதும் மிகவும் கொடூரமான ஆக்கிரமிப்பாளர்களாகிய எதிரிகளான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்தான் இந்திய மக்களின் படுமோசமான எதிரிகளாவர். இந்தியாவின்மீது அவர்களது நவீன காலனிப் பிடி இன்று பூரணமாகி விட்டது.

### இந்தியா நவீனகாலனியாகி விட்டது

உலகின் முதல் சோஷலிஸ நாட்டில் திரும்பவும் ஒரு முதலாளித்துவ சர்வாதிகார ஆட்சியை அமைத்துவிட்ட சோவியத் துரோக ஆட்சிக் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் துரிதமாக ஒத்துழைக்கின்றது. இந்தியாவை அமெரிக்காவினதும் சோவியத் யூனியனினதும் நவீன காலனி நாடாக மாற்றிவிட்டது. கூட்டாக உலகை ஆதிக்கம் கொள்வதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும் சோவியத் நவீன காலனி ஆதிக்க வெறியர்களினதும் ஒத்துழைப்புக்கு உகந்த உதாரணமாக இந்தியாவை எடுத்துக் கொள்ளலாம்.

அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மோசமடைவதற்குக் காரணம், ஆளும் வர்க்கங்களுக்கும் மக்களுக்குமிடையில் உள்ள மிகத் தீவிரமான முரண்பாடுகளேயாகும். முதலாளித்துவ—ஏகாதிபத்திய அமைப்பு பூரணமாக அழிந்து போகும் பாதையில் சென்று கொண்டிருக்கும் இச் சகாப்தத்தில், அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ இந்தியாவில் ஏகாதிபத்திய நவீன காலனித்துவ வல்லரசுகளுக்கும் எமது மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள், நிலப்பிரபுத்துவ வர்க்கங்களுக்கும் விவசாய வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகள், ஏகாதிபத்திய சார்பு—அதிகார வர்க்க மூலதனக்காரர்களுக்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் ஆகியன முன்னெப்போதையும்விட கூர்மையாக வளர்ந்து விட்டன. இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் திரிபுவாதம், பெரும் இந்திய நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்திய சார்பு—அதிகார வர்க்க முதலாளி வர்க்கம் ஆகியவைதான் இந்திய மக்களின் பிரதான எதிரிகள்; எமது நாட்டு உழைக்கும் மக்களின் முதுகை அமுக்கிக் கொண்டிருக்கும் நான்கு மலைகள்.

### ஐக்கிய முன்னணியின் அடிப்படை

இந்தப் பரம வைரிகளின் நேரடியானதும் மறைமுகமானதுமான ஆட்சியைத் தூக்கி எறிவதன் மூலம்தான் மக்கள் ஜனநாயகப் புரட்சி வெற்றிபெற முடியும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் புரட்சியின் பிரதான சக்தியான விவசாயி வர்க்கம் கிராமப் புறங்களில் புரட்சிகர தளப் பிரதேசங்களை அமைக்க வேண்டும். நீண்டநாள் ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டும். கிராமப் புறங்களிலிருந்து நகரங்களை முற்றுகையிடவேண்டும். இறுதியில் அவற்றைக் கைப்பற்றி முடிவான தேசம் பரந்த வெற்றியை அடையவேண்டும். தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம், சிறு முதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் ஆகியவற்றைக் கொண்ட ஐக்கிய முன்னணியின் அடிப்படை தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயி வர்க்கத்திற்கும் இடையிலான உறுதியான ஒருமைப்பாடாகும். இந்தியப் புரட்சியின் வெற்றி, புரட்சிவாதிகளும் மக்களும் எமது சகாப்தத்தின் மார்க்சிஸம் - லெனினிஸத்தின் மிக உயரிய நிலையிலான தலைவர் மாஓவின் சிந்தனை எந்த அளவுக்கு மனதில் கொள்கின்றனரோ அந்த அளவுக்கு நிச்சயப்படுத்தப்படும். தலைவர் மாஓவின் சிந்தனையைப் பரப்புவதுதான் சகல கம்யூனிஸ்ட் புரட்சிவாதிகளினது முழு முதற் கடமையாகும். இந்திய மக்களின் விரோதிகள் தூக்கி எறியப்படுவதானல் சதிகள் மூலமாக அல்ல, வெகுஜனக் கொள்கையை அமுல்படுத்துவதன் மூலமாகத்தான் அதனைச் சாதிக்க முடியும்.

### புதிய திரிபுவாதிகளின் போக்கு

சகலவிதமான திரிபுவாதிகளும், டாங்கே துரோகிகளும், புதிய திரிபுவாதக் கும்பலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சோவியத் நவீன காலனி ஆதிக்கத்தினதும், உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளினதும் அடிவருடிகள் என்பதை நிரூபித்துவிட்டனர். இவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி இந்திய மக்களின் விரோதிகள். மேர்டுவானில் புதிய திரிபுவாதத் தலைவர்கள் மார்க்சிஸ விரோத திரிபுவாதத் தத்துவார்த்த அரசியல் கொள்கைக்கு இறுதி முத்திரை இட்டுவிட்டனர். ஆனல் புரட்சிவாதிகளினதும் மக்களினதும் எதிர்ப்பை சமாளிக்க முடியாது முன்பைவிட மேலும் சூழ்ச்சிக்காரர்களாக - ஏமாற்றுக்காரர்களாக மாறிவிட்டனர். மார்க்சிஸ - லெனினிஸத்தையும், தலைவர் மாஓவின் சிந்தனையையும், நிராகரிக்கின்ற—பாராளுமன்றப் பாதையை விரும்புகின்ற—பலாத்காரப் புரட்சிப் பாதையை நிராகரிக்கின்ற இவர்களின் கட்சிக்குள்ளே சந்தர்ப்ப வாதிகளுக்குத்தான் இடமுண்டு; மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளுக்கு இடமேயில்லை. புதிய திரிபுவாதிகள் டாங்கே துரோகிகளைப் போன்று எதிர்ப் புரட்சியாளர்களின் கூட்டத்தில் சேர்ந்துவிட்டனர் என்பதும், மார்க்சிஸ - லெனினிஸத்தை உதட்டளவில் உச்சரித்துக்கொண்டு வெடித்துக் கிளம்புகின்ற விவசாயப் புரட்சியைக் காட்டிக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் மேர்டுவானுக்குப் பின் தெளிவாகத் தெரிந்துவிட்டது. உட்கட்சிப் போராட்டத்திற்கு இன்னும் இடமிருக்கிறது என்று கூறுபவர்கள் திரிபுவாதத்தை எதிர்த்துப் போராடுகின்ற அங்கத்தவர்கள் மத்தியில் மயக்கத்தை உண்டுபண்ணி அவர்கள் அணிதிரள்வதைத் தடைசெய்கின்றனர்.

### இந்தியாவைப் பிற்போக்கு வாதிகளின் கோட்டையாக்கும் முயற்சி

இன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும் சோவியத், நவீன காலனி வெறியர்களினதும் சர்வ உலகச் சதித்திட்

10 -ம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவில் அரை மணிக்கு ஒருவர் கொலை

அமெரிக்காவில் 30 நிமிடங் களுக்கு ஒருவர் வீதம் துவக்கினல் சுட்டுக் கொல்லப் படுகிருர்கள். ஒரு நாள் ஒன்றுக்கு 50 பேர் கொல்லப் படுவதாகவும், வருஷம் ஒன்றுக்கு 17, 000 துவக்குக்குப் பலியாகிருர்கள் என்று அறிவிக்கப் படுகிறது.



## பாராளும் மன்றம் பற்றி லெனின்

**ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில மக்களை அடக்கி யொடுக்குவது யார் என்பதை நிர்ணயம் செய்வது தான் முதலாத்ளிதுவ பாராளுமன்ற முறையின் சாராம்சமாகும். முடியரசுப் பாராளுமன்றம் மட்டுமல்லாமல் ஜனநாயக குடியரசுப் பாராளுமன்ற முறையும் அத்தகையதே யாகும்.**

### தீண்டாமை வெகுஜன ஒழிப்பு இயக்கத்தின்

# ஆலய பிரவேச இயக்கம் தொடர்கிறது

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில், வட பகுதியின் பழம் பெரும் ஆலயமான மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் கடந்த முதலாம் தேதி ஆலயப் பிரவேச இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. எக் காரணத்தைக் கொண்டும் ஆலயத்தினுள் சிறுபான்மைத் தமிழர்களை அனுமதியேன் என கோயில் பரிபாலகர்கள் அடம் பிடித்த போதிலும் கடந்த முதலாம் தேதி நூற்றுக்கணக்கான மக்கள் ஆலயத்தினுள் சென்றனர். அநேகமானோர், தொண்டர் படை என்ற பெயரில் கோயில் வாசலில் நிறுத்தப்பட்டிருந்த குண்டர்களால் வழி மறிக்கப்பட்டனர். இதனை யொட்டி, ஆலய வழிபாடு செய்யவிடாது தடுத்ததாக இக் குண்டர்கள் மீது அநேக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(அவர்கள்) கிறார்கள், தாங்கள் அரசியலில் ஸ்டண்ட் செய்வது போல் தமது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் இயக்கங்களுக்கு முன்னும் ஸ்டண்டுகள் செய்தால் அவர்கள் மிரண்டு விடுவார்கள் என்று நினைக்கின்றனர், ஆனால் இந்த எத்தர்கள் விழி கண் குருடர்கள்.

ஆலயப் பிரவேசத்தைத் தடுக்க தொ(கு)ண்டர் படை அமைக்கப் போவதாகவும் சிறுபான்மை தமிழ் மக்களில் ஒருவர் தானும் உள்ளே செல்ல முடியாது என்றும் சுந்தரலிங்கமும் அவர் சகாக்களும் பத்திரிகைகளில் அறிக்கை விட்டு மிரட்டினார்க . ஆனால் இந்த வேசம் செய்வோம் என்றும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்தனர்.

இவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களை எவ்வளவு தான் காட்டிக் கொடுத்த போதிலும், குறிப்பிட்ட தேதியில் முன்னூறுக்கும் அதிகமானோர் ஆலயப் பிரவேசத்திற்காக மாவிட்டபுரம் நோக்கிச் சென்றனர். உரிமையை நிலை நாட்டச் சென்ற இவர்களில் பலர் தடுக்கப்பட்டனர். தடுத்த குண்டர்கள் மீது பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அன்றிலிருந்து தொடர்ச்சியாக வட பகுதியின் சகல கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் ஆலயப் பிரவேசத்திற்காக தாழ்த்தப்பட்ட மக்கள் அலை அலையாகச் சென்ற வண்ணம் இருக்கின்றனர். பலர் ஆலயத்திற்குள் சென்ற பின்பும் கோயில் பரிபாலகர்களும், சுந்தரலிங்கமும் ஒருவரும் ஆலயத்திற்குள் செல்லவில்லை என பத்திரிகைகளில் அறிக்கைகள் விட்டுத் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் இந்த ஆலயப் பிரவேச இயக்கத்தோடும், மற்றும் தேநீர்க்கடை, சமத்துவம் கோரும் ஏனைய பொது நிலயங்கள் ஆகியவற்றிலெல்லாம் மேற்படி இயக்கத்தை முன் கொண்டு செல்வதில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இவ் வியக்கம் நாளுக்கு நாள் சகல பகுதி மக்கள் மத்தியிலும் ஒரு புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுத்து வருகின்றது. இது, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆரம்பித்த ஒன்றரை வருடங்களில் கிடைக்கப் பெற்ற பலாபலனாகும். காரணம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஏதோ குறுகிய, அல்லது குறிப்பிட்ட சமூக, அல்லது சாதிக்கான ஓர் இயக்கம் அல்ல; சகல ஒடுக்கப்பட்ட மக்களையும்—அதே நேரத்தில் தீண்டாமைக்கு எதிரான சகல மக்களையும் கொண்ட ஒரு பரந்த வெகுஜன இயக்கம் என்பதினலேயே இவ் இயக்கம் குறுகிய காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்று வருகிறது.

# திரிபுவாத ஐக்கிய முன்னணி

# ஒடுக்கப்பட்ட மக்களைக்

# காட்டிக் கொடுத்து விட்டது

இக் குண்டர்களுக்குத் தலைமை வகிப்பவரான முன்னாள் வவுனியா எம். பி. சுந்தரலிங்கத்தின் மீதும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உருவத்திலும், அரசியலிலும் வயது சென்ற திரு. சுந்தரலிங்கம் தனது காலத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆதீன கர்த்தாவுக்காகவும், அவரது உழுத்த பிற்போக்குத் தனங்களுக்காகவும் வக்காலத்து வாங்கி நிற்கிறார். அந்தோ பரிதாபம்! இவர் மட்டுமல்ல, இவரைப் போன்ற பலரும் நினைக்கிறார்கள் ... மிரட்டல்களுக்கு ஒருவரும் தலை வணங்கவில்லை. உரிமை கேட்கும் மக்கள் பயந்து அறிக்கைகள் விடவில்லை. அம் மக்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் உறுதியாக நின்றனர்.

ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களின் லேபிலில் உயிர்வாழும் திரிபுவாதி எம். சி. சுப்பிரமணியமும், முன்னாள் தமிழரசு செனட்டர் நல்லையாவும் கொட்டை எழுத்துக்களில் வரும் அளவுக்குப் பத்திரிகைகளில் சூாரசாரமான அறிக்கை விட்டனர். அவ் அறிக்கைகளில், தமக்கு இப்போது ஆலயப் பிரவேசம் அவசியம் இல்லை என்றும், மாவிட்டபுரம் ஆதீன கர்த்தாவின் ஆசியும் அனுமதியும் பெற்றே நாம் ஆலயப் பிர...

# தேர்தல்களால் அடிமை

# குடிமை முறை ஒழியாது

**தேர்தல் என்பது மக்களை ஏமாற்றும் மாயத்திரை. இதனால் எமது வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் நிகழப் போவதில்லை. இந்த மாயத்திரையைக் கிழித்து சுரண்டலின் கோரத்தன்மையை அம்பலப்படுத்த வேண்டும். புரட்சிகரப் போராட்டத்திற்கு வாலிபர் பெரும் படை திரளட்டும்.**

மேற்கண்டவாறு புத்தூர் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் புத்தூர் கிராம சபைத் தேர்தல் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் அறை கூவல் விடுத்துள்ளது. அவ்வறிக்கை கூறுயதாவது:

வட பகுதியின் சாதி அடக்கு முறையினதும், அடிமை குடிமை, முறைகளினதும், நிலப் பிரபுத்துவக் கொடுமைகளினதும் உறைவிடமான புத்தூர்ப் பகுதியாகிய எமது கிராமத்தின் கிராம சபைத் தேர்தல் இம்மாத இறுதியில் நடைபெற இருக்கின்றது. இத் தேர்தலுக்காக பெரும் பிரச்சாரங்களும், தலைவருக்கான போட்டிகளும் சகல மக்களின் மத்தியிலும் நடத்தப்பட்டு வரும் இவ்வேளையில் எமது வாலிபர் சங்கம் இத்

11-ம் பக்கம் பார்க்க

# வணக்கம்

சங்கானைக் கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது! யாழகத்து
மண்ணிற் பலகாலம்
செங்குருதிக் கடல் குடித்துச்
செழித்த மதத்துக்குள்
வெங்கொடுமைச் சாக்காட்டாய்
வீற்றிருந்த சாதியினைச்
சங்காரஞ் செய்யத்
தனைத்தெழுந்து நிற்கின்ற
சங்கானைக் கென் வணக்கம் !

கோயிலெனும் கோட்டைக்குள்
கொதிக்கும் கொடுமைகளை
நாயினிலும் மிக்க
நன்றிப் பெருக்கோடு
வாயிலிலே நின்று
வாழ்த்தும் பெருஞ்சாதி
நாய்கள்..........வாலை
நறுக்கி எழுந்தாய்
சங்கையிலே நீ யானை
சங்கானை — அந்தச்
சங்கானைக் கென் வணக்கம்!

எச்சாமம் வந்து
எதிரி நுழைந்ரதாலும்
நீச்சாமக் கண்கள்
நெருப்பெறிந்து நீறுக்கும்!

குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் ! சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே! — உன்
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் ! மெச்சுகிறேன் !!

எண்ணத்திற் கோடி
ஏற்றம் தருகின்றாய்
புண்ணுற்ற நெஞ்சுள்
புதுமை நுழைக்கின்றாய்
கண்ணில் எதிர்காலம்
காட்டி நிலைக்கின்றாய்
உன்னை எனக்கு
உறவாக்கி வைத்தவனை
என்னென்பேன்!
என்னென்பேன் !!
ஐந்து பெரும் கண்டத்தும்
எழுந்துவரும் பூகம்பம்
தந்தவனும் ! சீனம்
தந்தவனும் ! மா ஓ வின்
சிந்தனையால் உன் நாமம்
செகமெல்லாம் ஒலிக்கட்டும் !
செங் கொடியின் வீடே
சிறுமை உடைத்தெறியும்
சிங்கத்தின் நெஞ்சே !
செய்தேன் உனக்கு
வணக்கம் !

-சுபத்திரன்

# சந்தைநடத்தி வாழைப்பழம் விற்கும் கெனமன் கும்பல்

## திரிபுவாதிகளுக்கு தோழர் சண் சாட்டை

உலகெங்கும் புரட்சிகரப் போராட்டத் தீ பரவிக்கொண்டிருக்கிறது. அடக்கியொடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட தேசங்களும் மக்களும் ஏகாதிபத்தியத்தையும், அதன் அடிவருடிகளாயுள்ள உள்ளூர் பிற்போக்கு வாதிகளான ஆளும் வர்க்கத்தினரையும் எதிர்த்து விடுதலை யுத்தம் நடத்துகிறார்கள். வியட்நாமில் மட்டுமல்ல, பல ஆசிய ஆபிரிக்க நாடுகளில் புரட்சிகர மக்கள் கையில் துப்பாக்கியுடன் கிளர்ந்தெழுந்து விடுதலைக்காகப் போராடுகிறார்கள். இப்போராட்டங்களில் எல்லாம் ஆங்காங்குள்ள மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகள் - புரட்சியாளர்கள் நேரடியாகப் பங்கெடுக்கிறார்கள், தலைமை கொடுக்கிறார்கள். ஆனால் இலங்கையில் கெனமன் திரிபுவாதக் கும்பல் சந்தை நடத்தி தேசிய முதலாளி வர்க்கக் கட்சியின் தலைவரான ஸ்ரீமா அம்மையாரைக் கொண்டு திறப்பு விழா நடத்தி வாழைப் பழம் விற்கிறார்கள். இவர்களது கட்சியின் இருபத்தைந்து வருட கால ''வளர்ச்சி'' இதுதான்.

இவ்வாறு, கொழும்பு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது வருட நிறைவை ஒட்டிய கூட்டத்தில் உரையாற்றிய அதன் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் கூறினார்.

எண்ணிக்கையில் இருபத்தைந்து வருடகாலத்தை இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி அடைந்துவிட்டாலும், சென்ற நான்கு வருட காலத்திலும் மாசே—துங் சிந்தனையின் கீழ் ஒரு புரட்சிகர இயக்கமாக எமது கட்சியை அமைத்துக் கொண்டதன் பின்தான், இலங்கையில் உண்மையிலேயே ஒரு நேர்மையான மார்க்கிஸ-லெனினிஸ, புரட்சிகரக் கட்சி இருக்கின்றது என்று கூறிக் கொள்ள முடிகிறது என தோழர் சண் மேலும் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசிய பொழுது, இன்றைய காலகட்டத்திற்கு முன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அதன் ஒரு சாராரை கெனமன்திரிபுவாதக் கும்பலை-தர்க்க ரீதியாக சகதிக்குள் தள்ளி அமிழ்த்தியிருக்கும் கொள்கைகளை, அடிப்படையில் தவறான கொள்கைகளை பின்பற்றி வந்தது என்பதையும், அந்தப் பழைய தலைவர்களினால் இப்பிழையான கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்ததற்கான காரணத்தையும் விளக்கினார்.

தோழர் சண், இரண்டு பிரதான செல்வாக்குகள் எப்படி இலங்கை கம்யூஸ்ட் கட்சியை தவறாக வழிநடத்தியது என்பதையும் விளக்கினார். அதில் ஒன்று, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிறப்புக்கு, குருஷ்சோவுக்கு முன்பே திரிபுவாத தன்மையுள்ள பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி அடிப்படைக் காரணமாக இருந்ததாகும். இங்கிலாந்திலிருந்தபோது பல்கலைக்கழகங்களின் மூலம் கம்யூனிஸத்துக்குள் புகுத்தப்பட்டவர்களான விக்கிரமசிங்க, கெனமன், வைத்தியலிங்கம் போன்றோரினால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப் பட்டதனால், பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியில் குவித்து வைக்கப்பட்டிருந்த திரிபுவாதக் குப்பைகளையும் தன்னுள் அடக்கியதாக இருந்தது. இதற்கும் மேலாக, இன்று நவீன திரிபுவாதச் சேற்றில் அமிழ்ந்திருக்கும் பி. சி. ஜோஷியினால் வழிநடத்தப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தவறான அமைப்புக் கொள்கைகளின் செல்வாக்கினாலும் ஈர்க்கப்பட்டிருந்தார்கள்.

மற்றது, கம்யூனிஸ்ட் கட்சி உருவாவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, லங்கா சமசமாஜக் கட்சியின். ட்ரொட்ஸ்கிய வாதத்திற்கு எதிராக அங்கிருந்து ஒரு சாரார் பிரிந்ததும் ஆகும். சமசமாஜக் கட்சியின் இடது சாரி ஒரு முனைவாத, எதிர்ப்புரட்சிகர, சோவியத் எதிர்ப்புக் கொள்கைகளுக்கு எதிராக சரியான தீர்மானம் எடுத்து அக்கட்சியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியாகப் பிரிந்தாலும் அது வலதுசாரிப் பகுதிக்குள் அடங்குவதைத் தடுக்க முடியாதிருந்தது. இதில், அன்று டி. எஸ். சேனநாயக்காவினால் தலைமை தாங்கப்பட்ட தேசிய காங்கிரஸில் கட்சி அங்கத்தவர்கள் சேருவதற்கு அனுமதியளித்ததும், 1947 தேர்தலில் யு. என். பி. யை ஆதரிக்க வேண்டும் என கண்மூடித்தனமாக முடிவெடுத்தும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவையெல்லாம் சேர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைவிட சமசமாஜ கட்சி புரட்சிகரமாக மக்கள் மத்தியில் தெரிவதற்குச் சாதகமாயிருந்தது. இக் காலகட்டத்தில், சமசமாஜ கட்சியின் நச்சுத் தன்மை வாய்ந்த ட்ரொட்ஸ்கியவாதத்துக்கும், சோவியத் யூனியனை புரட்சிகரமாக வளர்த்து வந்த தோழர் ஸ்டாலினுக்கும் எதிராக சமசமாஜ கட்சி எடுத்த நடவடிக்கைகளுக்கும் எதிராகப் போராடவே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

அடுத்த முக்கிய நடவடிக்கை இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தை உருவாக்கிப் பல முக்கிய வேலை நிறுத்தப் போராட்டங்களுக்குத் தலைமை அளித்ததாகும். இங்கு கூட அடிப்படையில் பொருளாதார நோக்கங்களில் மட்டும் தொழிலாளர்களின் கவனத்தைத்தான் கட்சி வைத்திருந்ததே தவிர, சரியான அரசியல் வளர்ச்சியை உண்டாக்கவில்லை.

பிற்காலத்தில் கட்சி வலது சாரிகளுக்கும் இடதுசாரிகளுக்கும் இடையில் வந்து நின்றது. கட்சியின் நான்காவது மாநாடு 1950-ல் நடந்தபோது, இந்த தவறுகள் பல திருத்தப்பட்டு, ஏகாதிபத்தியத்துக்கும், யு. என். பி. க்கும் எதிரான சகல சக்திகளையும் தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலான ஐக்கிய முன்னணியில் அணிதிரட்டப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டாலும், ஏகாதிபத்தியமும், அதன் உள்நாட்டுப் பிரதிநிதிகளும் எப்படி எடுத்தெறியப்பட முடியும் என்பது பற்றி கட்சிக்குள் தெளிவு இருக்கவில்லை. இந்த தெளிவற்ற தன்மைதான், கட்சியின் பழைய தலைவர்களை நவீன திரிபுவாதப் புதை குழிக்குள் இழுத்துச் சென்றது என்பது ஒரு பொறுப்பு வாய்ந்த உண்மையாகும்.

தோழர் சண் மேலும் சொன்னார்:

இன்று மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் ஆகிய எங்களுக்கும், திரிபுவாத, சமசமாஜக் கும்பலுக்கும் இடையிலுள்ள பிரதான முரண்பாடு புரட்சியின் அவசியத்தை ஏற்பது அல்லது மறுப்பது என்பதிலும், ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்தைப் பற்றியதிலும், ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏவல் நாய்களையும் எடுத்தெறிய பலாத்காரப் போராட்டம் அவசியம் என்பதிலும் தான் உள்ளது. இன்று கெனமன் திரிபுவாதக் கும்பலும் சமசமாஜ தலைமையும் சேர்ந்து மக்களின் புரட்சிகர சக்திகளை, முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்துக்குள் குழி தோண்டிப் புதைக்க முற்பட்டிருக்கின்றார்கள். இத்துடன் இவர்கள் இன்று பச்சை சந்தர்ப்பவாதிகளாகவும், இன வெறியர்களாகவும்மாறிவிட்டதோடு தொழிலாளர்களின் உணர்ச்சிகர எழுச்சிகளை தேசிய முதலாளிவர்க்கத்துக்கு

11-ம் பக்கம் பார்க்க

---

### சீன பத்திரிகைகளிலும் வானொலியிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 9 வது தேசிய மாநாட்டு முடிவுகள்

1968 ம் ஆண்டு ஏப்பிரலில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 9 வது தேசிய மாநாட்டின் முடிவுகள் சீன பத்திரிகைகளிலும், வானொலியிலும் பிரச்சாரம் செய்யப் பட்டுள்ளது.

சீன கம்யூனிஸ்ட்கட்சியின் உத்தியோக பூர்வமான வெளியீடான மக்கள் தினசரி ஜூன் 16 ந் தேதி இதழில் தனது சர்வதேசச் செய்திகளுக்கான பகுதியில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பகுதியை இச் செய்திக்காக ஒதுக்கியது. பீகிங் வானொலி இந்த அறிக்கையை எட்டுத் தடவை ஒலிபரப்பியது; அடுத்த நாள் ஷின்ஹுவா இச் செய்தியை வெளியிட்டது. பீகிங் ரிவ்யூ என்ற வார சஞ்சிகையின் 25 வது இதழில் மூன்று பக்கங்களில் இச் செய்தியைப் பிரசுரித்தது.

---

# கம்யூனிஸ்ட்.......

◎ — 8-ம் பக்கத் தொடர்

...ட்டத்தில் இந்தியா முக்கியமான மையமாகியுள்ளது. இந்தியப் புரட்சியின் சக்திகளை எதிர்த்துப் போராடவும், வியட்நாம் மக்களினது மகத்தான புகழ்மிக்க தேசிய விடுதலைப் போராட்டத்தையும், தெற்கு-தென்கிழக்கு ஆசியாவின் ஏனைய மக்களின் விடுதலைப் போராட்டங்களையும் சதி செய்வதற்கும், சோஷலிஸ சீனத்தை ஆக்கிரமிப்பதற்கும் இந்திய ஆளும் வர்க்கங்களின் விருப்பத்துடனும் ஒத்துழைப்புடனும் இந்தியாவை பிற்போக்குவாதிகளின் சக்தி வாய்ந்த கோட்டையாக ஆக்குவதற்கு முயல்கின்றனர். இந்த நோக்கத்தை மனதில் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பூரண ஒத்துழைப்புடன் சோவியத் துரோகிகள் இந்தியப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்கு அதிகமான ராணுவ ஆயுதங்களைக் கொடுக்கின்றனர். ஜெட் போர் விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றை அளிக்கின்றனர். இந்திய மண்ணில் எம். ஐ. ஜி. விமானத் தொழிற்சாலைகளையும், அணு ஆயுதத் தளங்களையும் கட்டிவிட முன்வந்துள்ளனர். அந்தமான் நிகோபார் தீவுகளில் தமது யுத்தக் கப்பல்களுக்கு கடல் தளங்களை அமைக்க முயல்கின்றனர்.

உலகம் இன்று இரு முகாம்களாகப் பிளவுபட்டு நிற்கின்றது. ஒன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும் அவர்களின் பிரதான சகாவான சோவியத் நவீன காலனி வெறியர்களினதும் தலைமையில் உள்ளது. இன்றைய சகாப்தம் ஏகாதிபத்தியம் இறுதியாகச் சரிந்து விழுகின்ற, சோஷலிஸம் தனது இறுதியான உலக ரீதியான வெற்றிப் பாதையில் செல்கின்ற, தலைவர் மா சே-துங் அவர்களினது சகாப்தம். ஏகாதிபத்தியத்திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் சகாக்களுக்கும் எதிரான இந்திய மக்களின் வெற்றி—உலக மக்களின் மகத்தான ஏகாதிபத்திய விரோதச் சேனையின் ஒரு பகுதியான இந்திய மக்களின் வெற்றி நிச்சயம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்வேளையில், தலைவர் மாஓவின் சிந்தனையை ஏற்றுக் கொள்கின்ற இந்தியாவின் சகல பாகங்களிலுமுள்ள புரட்சிவாதிகளை நாம் அறைகூவி அழைக்கின்றோம். இந்தியப் புரட்சியின் வெற்றியைத் துரிதப்படுத்துவதற்காக உங்கள் சக்திகளை அணிதிரட்டி, போராட்டங்களை ஒருமைப்படுத்திக் கொள்ளுங்கள். தலைவர் மாஓவின் சிந்தனை எனும் செம்பதாகையின் கீழ் நாம் அனைவரும் அணிதிரள்வோம். அவரது சிந்தனையை இந்தியாவின் யதார்த்த நிலைமைகளுக்கேற்ப அமுல்படுத்துவோம். நக்ஸல்பாரியை ஒத்த போராட்டங்களின் ஊடாக உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றைக் கட்டி வளர்ப்போம். ஏனெனில், புரட்சிகரக் கட்சி ஒன்றில்லாமல் புரட்சி வெற்றிபெற முடியாது. தலைவர் மாஓவின் சிந்தனையில் உறுதியான நம்பிக்கையுள்ள, திரிபுவாதிகளினதும், புதிய திரிபுவாதிகளினதும் தலைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள—ஆனால் வெவ்வேறு குழுக்களாக இன்றும் இயங்கி வருகின்ற சகல புரட்சிவாதிகளையும் இச் சந்தர்ப்பத்தில் நாம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்: தனித்தனியான தங்கள் குழுக்களைக் கலைத்து விட்டு கம்யூனிஸ்ட் புரட்சிவாதிகளின் அகில இந்திய இணைப்புக் கமிட்டியில் அணிதிரளுங்கள். இந்த வேளையில் தனித்தனிக் குழுக்களாக இயங்குவது இந்தியப் புரட்சிக்குப் பாதகமானது என்பதை அவர்கள் உணரவேண்டும்.

ஏகாதிபத்தியத்தினதும், அதன் பிரதான சகாவான திரிபுவாதத்தினதும் இறுதிக் காலம் நெருங்கிவிட்டது. இந்தியப் புரட்சியின் வெற்றி அத்திருநாளின் வரவை விரைவாக்கும்.

''காலனி ஆதிக்கம், ஏகாதிபத்தியம் மற்றும் சகலவித சுரண்டல் ஆகியன பூரணமாக ஒழிந்துபோகின்ற, உலகின் சகல ஒடுக்கப்பட்ட மக்களினதும் தேசங்களினதும் பூரண விமோசனம் ஏற்படுகின்ற காலம் வெகுதூரத்தில் இல்லை'' என்று அண்மையில் விடுத்த அறிக்கையில் தலைவர் மா சே-துங் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் பலாத்காரத்தை தூண்டுவோர் யார்?

ஆட்சியாளருக்கும், தமது வர்க்கத்தினரின் நலன்களுக்கும் ஏற்றவாறு செய்திகளைத் திரித்து வெளியிடுவதில் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் கைதேர்ந்தவையாகும். இப்பத்திரிகைகளில் ஒன்றின் சென்ற வாரத் தலைப்பு ''ஆலயப் பிரவேசம் படுகொலைக்கு வழி வகுத்தது'' என்றிருந்தது. யாரோ ஒருவர் கூறியதுபோல இத் தலைப்பு குறியீட்டுக்குள் காணப்படினும் யார் கூறியது என பத்திரிகை தெரிவிக்கவில்லை. இதற்குக் கீழே யாழ்ப்பாணத்தில் இன்று கொதித்துக் கொண்டிருக்கும் ஆலயப்பிரவேசம் பற்றி பழைய எம். பி. வவுனியா சுந்தரலிங்கம் அளித்த பேட்டியும் இருந்தது.

அப்பேட்டியில் சுந்தரலிங்கம் பின்வருமாறு கூறியிருந்தார். ''ஜனநாயகம் என்பது, சில வரம்புக்குள் உட்பட்டுத் தலைகளை எண்ணுவதும், வரம்பு மீறினல் தலைகளை உடைப்பதும் என்று நான் பல தடவை பாராளுமன்றத்தில் கூறியுள்ளேன். ''மதமும் ஒரு வரம்பாகும். ஜனநாயகத்துக்கு இத்தகைய விநோதமான வரைவிலக்கணத்தைச் சுந்தரலிங்கம் போன்ற தனிப்போக்கான பேர்வழியே கண்டுபிடிக்க முடியும். ஆனல் திருவாளர் சுந்தரலிங்கத்தாரின் சிந்தனைகளும் கோட்பாடுகளும் நிதானமற்றவையாகக் காணப் படுகின்றன. அவரின் அடுத்த வசனங்களைக் கவனித்தால் இது புலப்படும். அவர் தொடர்ந்து கூறியிருந்தார்: ''ஜனநாயகத்தின் அடிப்படை கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தவறியதால், இன்று யாழ்ப்பாணம் முழுவதும் கொதித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி எண்ணெய் ஊற்றுகிறது. சங்கானை, கொடிகாமம், மற்றும் கிராமங்களில் சமூக இன்னல்களினல் ஏற்பட்ட அதிருப்தி பொங்கி வழிகின்றது. கொலையும், இரத்தம் சிந்தலுமே அன்றாட வழக்காகிறது. மதம், மதச்சடங்குகள் சீர்த்திருத்தம் என்ற பெயரால் நடைபெறும் இச் செயல்களை நான் முழு மூச்சுடன் எதிர்க்கின்றேன்.''

'வரம்பை மீறினல் மண்டை உடையலாம்' என்பது சுந்தரரின் ஜனநாயகமாக இருக்கும் போது, இத்தகைய நடவடிக்கைக்கு அவர் ஏன் இப்போது எதிர்ப்புத் தெரிவிக்கின்ருர்? ஒரு வேளை பொலிஸார் மண்டையை உடைப்பதையே ஜனநாயகம் எனக் கொள்கின்ருர் போலும்! இப்படிப் பார்த்தாலும் யாழ்ப்பாணத்தில் நடப்பதைக் கண்டு சுந்தரர் திருப்தி அடையலாமே? ஏனெனில், இன்று பல மண்டைகளை உடைப்பவர்கள் பொலிஸாரே!

சாதிப்பிரச்னையை யொட்டி யாழ்ப்பாணத்தில் கொலைகளும் அடிதடிகளும் நடப்பது உண்மையே. ஆனல் இவற்றைத் தூண்டி விடுபவர்கள், கொலைசெய்பவர்கள் யார்? இங்கு கொலையுண்டவர்களில் பெரும்பாலானேர் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லவா? பொலிஸ் நிலையங்களில் பூட்டி வைக்கப்பட்டுள்ளோர், பொலிஸாரால் பெரும் கொடுமைகளுக்கானேர் யாவரும்

**குமார்**

தாழ்த்தப்பட்ட மக்கள் என்பது பொய்யா? கீழ்த்தரமானதும், பிற்போக்கானதுமான, சாதியமைப்பை இன்று பொலிஸாரின் உதவியுடன் சாதி வெறியர் காப்பாற்ற முயல்கிருர்கள் என்பதும் பொய்யா?

உண்மை யாதெனில், தமக்குரிய ஏகபோக நலன்கள் அழிந்து போகா வண்ணம் பாதுகாப்புத் தேடும் உயர் சாதி வர்க்கத்தினரே கொலைகளையும், அட்டூழியங்களையும், கட்டவிழ்த்து விடுகின்றனர். பொலிஸ் என்ற உருவத்தில் காணப்படும் அரச அதிகாரமும், இந்த உயர் வர்க்கத்தைச் சேர்ந்ததால் இவர்களுக்கு முழு ஆதரவையும் கொடுத்தது. சாதிப் போராட்டம் என்பது அடிப்படையில் வர்க்கப் போராட்டம் என்பதை இது காட்டுகிறது. உடமையாளர்கள் உடமையற்றோருக்கு எதிராக நடத்தும் இப் போராட்டத்தில் பொலிஸ் அதிகாரம் உடமையாளர்களுக்கு ஆதரவு கொடுக்கும். இதுவே உண்மை நிலை.

இது ஒரு சர்வ வியாபக உண்மையாகும். 'ஜனநாயக' நாடுகளில் எங்கெல்லாம் வர்க்கப் போராட்டம் உக்கிரப்படுகின்றதோ, அங்கே பொலிஸ் அதிகாரம், உடமை வர்க்கத்திற்குச் சாதகமாகவே காணப்படும். ஐக்கிய அமெரிக்காவில் இன்று நீக்ரோ மக்கள் தமது உரிமைக்காக போராடும் போது இதைக் காணலாம். இங்கெல்லாம் நடக்கும் பொலிஸ் அட்டூழியங்கள் பற்றி இந் நாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகள் மூச்சும் விடா. சுதந்திரமான நேர்மையுள்ளம் படைத்த நிருபர்களே உண்மைகளை அரித்தெடுத்து எமக்களிக்கின்றனர். 1946 ல் ''ஹிரோஷிமா'' என்ற நூலை வெளியிட்ட செய்தி நிருபரான ஜோன் ஹெசே என்பவர் அமெரிக்காவில் நடந்த சம்பவங்களை ஐந்து கிழமைகளில் சுற்றிப்பார்த்து உண்மைகளை வெளியிட்டார். டெட்ரோயிற் நகரில், சென்ற ஆண்டு நடந்த போராட்டத்தில் இறந்த 43 பேர்களில் ஒருவரை யாகுதல் நீக்ரோ வீரர்கள் சுட்டுவீழ்த்தவில்லை எனவும் அனைவரையும் பொலிஸாரே சுட்டுவீழ்த்தினர் எனவும் இவர் எழுதிய நூலில் காணலாம்.

இங்கு நடைபெற்ற மிகக் குரூரமான கொலைகள் அல்ஜியர்ஸ் மோட்டல் எனும் ஹோட்டலில் தான் நடைபெற்றன, இங்கு மூன்று இளம் நீக்ரோக்கள் அறையினுள் வைத்து மிகக் கிட்ட நின்று சுடப்பட்டார்கள். ''துப்பாக்சிச் சூடுகளால் பாதிக்கப்பட்ட தேசிய காவலாளிகளைப் பாதுகாப்பதற்கென பல பொலிஸார் அனுப்பப்பட்டார்கள். உண்மையில் இத் துப்பாக்கிச் சூடுகள் வெறும் வெத்து வெட்டுக்களே! கண்ணுல் கண்ட ஒரு சாட்சியம் இவ்வாறு கூறியது. இச் சம்பவம் பற்றிய உண்மைகள் தெளிவாக புலப்படாததை அறிந்த ஜோன் ஹெசே சிரமப்பட்டு, ஆராய்ந்து உண்மையை ஒரு நூலாக வெளியிட்டார். அமெரிக்காவில் தாண்டவமாடும் நிறவெறிக்குச் சரியான சவுக்கடி கொடுக்கிறது அந்த நூல்,

இந் நூலிலுள்ள சிறப்பான அதிகாரங்களில் ஒன்று, ஒப்றி பொல்லாட் எனும் 19 வயது நீக்ரோ இளம் பையனைப் பற்றியது. இவனுடைய வாழ்க்கை இந் நாட்டில் தாழ்த்தப்பட்ட வாலிபர்களினது வாழ்க்கைக்கு ஒத்ததாகக் காணப்படுவதால், ஓரளவு இதை விரிவாக எழுத விரும்புகின்றேன்.

ஹெசே கூறுவதாவது: 'இந் நாட்டிலுள்ள ஒவ்வொரு நீக்ரோ வாலிபனும் 10 முதல் 12 வயதை அடைந்தவுடன் தனது வாழ்க்கைப் பாதையின் ஒரு பிரிவில் வந்துநிற்கின்ருன். இங்கிருந்து ஒரு பாதை. ஓரளவு கல்வி, ஏதோ ஒரு வேலை எனக் கொண்டு செல்கிறது. மற்றப் பாதை, படிப்படியாக அவனையும் அறியாமலே பொலிஸாருடன் மோதும்படி கொண்டு செல்கிறது. ஒப்றே இந்த இரண்டு பாதைகளுக்குமிடையே நின்று தத்தளித்தான். ஒரு சிறந்த விளையாட்டு வீரனும், சித்திரம் வரைதலில் தேர்ச்சி பெற்றவனுமான ஒப்றே பள்ளியில் இன்னல்களுக்குட்பட்டான் என அவனது தாயார் ஹேசேக்குக் கூறினுள். அவனது வாழ்வு முழுவதும் இன்னல்களே—பாடசாலையில், நீதிமன்றத்தில், றோட்டில்— வெள்ளையன் எங்கெல்லாம் தென்பட்டானே அங்கெல்லாம் ஒப்றே துன்புறுத்தப்பட்டான். கடமையில் நிற்கும் பொலிஸ்காரனுக்கும் துன்புறுத்துவது தனது கடமையாகப்படலாம். வேட்டை நாயின் கடமை போன்றதே இக் கடமை என்பதை நாம் உணரக்கூடியதாயுள்ளது.

சென்ற ஆண்டு அமெரிக்க நகரத்தில் நடந்த பொலிஸ் அட்டூழியங்கள், யாழ்ப்பாணத்தில் நடப்பவற்றை நினைவுறுத்துகின்றன. வெள்ளையர் சமூகம் கறுப்பருக்குக் காட்டும் பாதையைப் போன்றே, நம் நாட்டு தாழ்த்தப்பட்ட இளைஞர்களும் ஒரு பாதையில் நிற்கின்றனர், ஓரளவு படிப்பு, ஏதோ தொழில் என்ற அடங்கிய வாழ்வை இது காட்டுகின்றது.

நீக்ரோ மக்கள் தமது வாழ்வில் மாற்றம் காணத் துடிப்பது போலவே தாழ்த்தப்பட்ட மக்களும் இன்று மாற்றம் காணத் துடிக்கின்றனர். பல நூற்றுண்டு காலமாக ''தீண்டப்படாதவர்கள்'' என பட்டம் தீட்டி வைக்கப்பட்ட சமூக அமைப்பை அவர்கள் தகர்த்தெறிய விரும்புகின்றனர். வேருெரு காரணமுமின்றி அச் சமூகத்தில் பிறந்ததே இந்த அப்பாவிச் சிறுவர்களின் குற்றம்!

நீக்ரோ மகன் இன்று கேள்வி கேட்கப் புறப்பட்டு விட்டான்! ஒப்றேயின் தாய் ஹேசேயை நோக்கிக் கேட்டாள். 'நீக்ரோ பொலிஸ்காரன் வெள்ளையர் வாழும் பகுதியில் போய் எம்மவரைச் சுட்டதுபோல் சுட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்!! இவையெல்லாம் எமது நெஞ்சிலிருந்து அகற்ற முடியாது, அவை என்றும் பசுமையாகவே இருக்கும்.'

இதுபோலவே, யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் ஒரு முழுக் கிராமமே தீக்கிரையாக்கப் பட்ட போது இம் மக்கள் அருகிலிருந்த பொலிஸ் நிலையத்துக்கு முறையிடப்போன சமயம் துரத்தப்பட்டார்கள்.

இவ்வாறு கொடுமைப்படுத்தப்பட்ட பெண்டு பிள்ளைகள், விதவைகள், அனுதைகள் ஆக்கப்பட்டோர் யாவரும் இன்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். தமக்கு நடந்த கொடுமைகளை அவர்கள் மறக்கப்போவதில்லை.

சுமார் 10 வருடங்களுக்கு முன்பே சமுதாயக்குறைபாட்டுத் தடைச் சட்டத்தை கொண்டுவரும் அளவுக்கு இந் நாட்டவரின் மனச் சாட்சி மாறிவிட்டது. இதை மறந்த சுந்தரலிங்கத்தார் தான் பரிணம மாற்றத்தில் நம்பிக்கை உள்ளவரெனத் தெரிவிக்கின்ருர். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முன் பத்து வருடங்கள் சென்றுவிட்டது அவருக்குப் போதாதா?

## தேர்தல்களால் ....

9-ம் பக்கத்தொடர்ச்சி

தேர்தலைப் பற்றியும் இதில் நிற்கும் அல்லது பலரை ஆட்டிபடைப்பவர்களைப் பற்றியும் இப்பகுதி மக்களுக்கும் எடுத்துக் கூற வேண்டியது எமது முக்கிய கடமையாகும்.

இன்று தேர்தலை முன் நின்று நடத்துபவர்கள் புத்தூர்ப் பகுதியின் பெரும் நிலப்பிரபுக்களாகும். விரல்விட்டு எண்ணக்கூடிய இவர்கள் பல்லாயிரம் பரப்பு நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள். இந் நிலத்தை வைத்துக் கொண்டு புத்தூர் பகுதியில் வாழும் பல்லாயிரக் கணக்கான ஒடுக்கப்பட்ட மக்களையும், நிலமற்ற விவசாயிகளையும் தமது அடிமைகளாக்கி அதன் மூலம் அம் மக்களை ஈவிரக்கம் இன்றிச் சுரண்டி சுகபோகம் அனுபவிப்பவர்கள் தான் இந்நிலப் பிரபுக்கள். இவர்கள்தான் இன்றைய இருபதாம் நூற்றுண்டின் அடிமை குடிமை முறைகளினது பாதுகாவலர்கள். உழுத்த பிற்போக்குத் தனங்களைப் பாதுகாத்து நிற்கின்றனர்.

இந் நாட்டில் பாராளுமன்றத் தேர்தல்கள் பல வந்தும், பல தலைவர்களை நாம் அனுப்பியும் சாதாரண மக்களாகிய எம்முடைய வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும் நாம் காணவில்லை, பாராளுமன்றத்தின் மூலம் மாற்ற முடியாத எமது அவல வாழ்க்கையை வெறும் கிராம சபைத் தேர்தலுக்கு வாக்களித்து மாற்ற முடியுமா? இல்லவே இல்லை. ஆனல் தேர்தல் என்ற மயக்குப் பாதையை மக்களுக்குக் காட்டி அதன் மூலம் சகல மக்களின் பிரச்சினைகளும் மழுங்கடிக்கப்படுகின்றன. தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் என்ற பெயரில் நிற்கும் இவர்கள் யார்? ஒரே சமூகங்களுக்கிடையில் இத் தேர்தலின் மூலம் பிரிவினைகளையும் போட்டி பொருமைகளையும் உண்டாக்குபவர்கள் யார்? உழைக்கும் மக்களை ஒன்றிணையவிடாது அவர்கள் மத்தியில் சாதி, உயர்வு தாழ்வு குரோதங்களை உண்டாக்குபவர்கள் யார்? எல்லாம் இந் நிலப் பிரபுக்களேயாகும். உழைக்கும் மக்களையும் உரிமை மறுக்கப்பட்ட மக்களையும் பிரித்து வைப்பதன் மூலம் தமக்கு எதிராக மக்கள் ஒன்றிணைவதைத் தடுப்பதற்காகவே இந் நிலப்பிரபுக்கள் தேர்தலில் முன்னணியில் நிற்கின்ருர்கள். இந்த எமாற்று வித்தையை சாதாரண மக்களாகிய நாம் அடிப்படையில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்கெல்லாம் யார் காரணம்? நாம் முற்பிறப்பில் செய்த வினையல்ல. இந்த நிலப் பிரபுக்களே எமது இரத்தத்தை உறிஞ்சி மாடமாளிகைகளில் சுகபோகம் அனுபவித்து வருகின்றனர், இன்றைய இருபதாம் நூற்ருண்டிலும் மனித நாகரீகம் வளர்ச்சியடைந்த கட்டத்திலும் தொடர்ந்து எமது உரிமைகளைத் தர மறுக்கின்றனர். அடிமை குடிமை முறைகளைத் தொடர நிர்ப்பந்திக்கின்றனர். கல்வியறிவற்ற எமது மக்களின் குழந்தைகளை கல்லூரிகளில் அனுமதிக்க மறுக்கின்றனர். தமது பிணத்தைக் காவும்படி ஏழை விவசாய மக்களை நிர்ப்பந்தித்துப் பயமுறுத்துகின்றனர். நிலக்குத்தகையின் மூலம் சுரண்டுவதை நிறுத்த மறுக்கின்றனர். நில உடமையை வைத்துக் கொண்டு பயமுறுத்தல் விடுகின்றனர். இவையெல்லாவற்றையும் செய்யும் இந் நிலப்பிரபுக்கள் தான் கிராமசபைத் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசு என்ற போர்வையில் மக்களை ஏமாற்றி, அல்லது பயமுறுத்தி வாக்குச் சேகரித்து தமது சுகபோகங்களையும் அடிமை குடிமை முறைகளையும் நீடிக்கின்றனர்-

இன்றுள்ள இந்த நிலைமைகளை ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம், நிலமற்ற விவசாயிகளாகிய நாம் நன்கு உணர வேண்டும், ஆயிரமாயிரம் வருடங்களாக நாம் அனுபவித்து வந்த கொடுமைகளையும் சோகம் நிறைந்த வாழ்க்கை வரலாறுகளையும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் யாரால் அடக்கப்படுகின்ருேம் எந்தக் காரணத்தால் சுரண்டப் படுகின்ருேம் என்பதை உணரவேண்டும். நிலமற்ற மக்களுக்கு நிலம் வேண்டும், உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கு உரிமைகள் வேண்டும். அடிமை குடிமை முறைகள் உடைத்தெறியப்பட வேண்டும். இவையெல்லாயற்றிற்கும் சகல மக்களும் ஒரே அணியில் ஐக்கியப்பட வேண்டும்.

# தமிழரசு கட்சி தமிழ் மக்களை
# கொல்லைப் புறத்திற்கு
# அழைத்து சென்று விட்டது

◎ 1-ம் பக்கத் தொடர்ச்சி

ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டதையும், அதனைத் தொடர்ந்து சமாளிக்க முடியாத அளவுக்கு வானளாவ உயர்ந்துள்ள விலைவாசி உயர்வையும் பற்றி ஓர் எதிர்ப்பும் காட்டவில்லை. வட பகுதியில் தீண்டாமைக்கும் சாதி ஒடுக்கு முறைக்கும் எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்தும் இயக்கங்களுக்கு ஆதரவாக ஒரு சின்னி விரலைதானும் உயர்த்தவில்லை. சிறுபான்மை இன மக்களுக்கு, குறிப்பாக இந்திய வம்சாவழியைச் சேர்ந்த நாடற்ற பிரஜைகளான தொழிலாளர்களுக்குச் சொல்ல முடியாத இன்னல்களை விளைவிக்கும் என்று தெரிந்தும் கூட அடையாள அட்டை மசோதாவுக்கு வெளிப்படையாக தமிழரசார் ஆதரவு கொடுத்தார்கள். இதனால் இந்திய வம்சாவழி தொழிலாளர்கள் தமது நாடற்ற தன்மையை மெய்ப்பிக்கும்படி கேட்கப்படுவார்கள். தமிழரசார் பங்காளிகளாக இருக்கின்ற இதேஅரசாங்கம் தான் வட பகுதி மக்களைத் தொல்லைக்குள்ளாக்கும் - அவர்கள் அனைவரும் கள்ளக்கடத்தல் காரர்கள் என்று அவமானப் படுத்தும் பொருட் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

தெளிவாக, தமிழரசுக் கட்சி தமிழ் மக்களைக் கொல்லைப் புறத்துக்கு இட்டுச் சென்றது. அது தமிழ் மக்களுக்குச் செய்தது ஒன்றே ஒன்றுதான். சிங்கள மக்களிடையே உள்ள வகுப்புவாதிகளுக்கும், குறுகிய தேசியவாதிகளுக்கும் தீனி போட்டு அவர்களின் பெரும் பகுதியினரின் எதிர்ப்பை தேடிக்கொடுத்தது தான் அது. சிங்கள வகுப்புவாதமும், தமிழ் வகுப்புவாதமும் ஒன்றிலிருந்து ஒன்று வளர்கிறது என்பது நன்கு தெரிந்த விஷயமாகும்.

தமிழரசு கட்சியின் தலைமைப் பீடமும், அதன் கொள்கைகளின் வங்கலோட்டுத்தனமும் இன்று நாடு முழுவதும் அம்பலமாகி விட்டது. எனவே, தமிழரசு கட்சி தலைமைப் பீடத்தின் வங்கலோட்டுத்தனத்தையும், அதன் பிற்போக்கு, வகுப்புவாத கொள்கைகளையும் உதறித் தள்ளிவிட்டுசிங்கள மக்கள் மத்தியில் உள்ள புரட்சிகர பகுதியினருடன் ஒத்துழைப்பதிலும், நட்புறவு கொள்வதிலும் நம்பிக்கை வைக்கும் காலம் தமிழ் மக்களுக்கு வந்து விட்டது. இவ்விரு பகுதியினரின் வர்க்க நலனும் ஒன்றே. எதிரியும் ஒன்றுதான்- வெளிநாட்டு ஏகாதிபத்தியமும் அதன் வேட்நாய்களுமே தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலுள்ள புரட்சிகர அரசாங்கத்தின் கீழ் மட்டுமே யல்லாது, முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் தமது உண்மையான உரிமைகளை வென்றெடுக்க முடியாதென்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிய வேண்டும். சகலருக்கும் பொருளாதார உத்தரவாதமுள்ள சோஷலிஸ அரசின் கீழ் மட்டுமே சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

தமிழ் மக்கள் தமிழரசு கட்சியின் தலைமையை உதறித்தள்ளுவதற்கு, சிங்கள மக்களின் மத்தியிலுள்ள முற்போக்கு உணர்வும், புரட்சிகர உணர்வும் வாய்ந்த பகுதிகளுக்குச் சமமமன பொறுப்பு உண்டு. எல்லாத் தமிழ் மக்களும் தமிழரசுக்கார ரல்ல என்பதைச் சிங்கள மக்கள் உணரவேண்டும். தமிழரசுக் கட்சியின் பிற்போக்கு, வகுப்புவாத கொள்கைகளை எதிர்க்கும் தமிழ் மக்கள் கணிசமாக உள்ளனர். ஆனல், பொறுப்பற்ற, சத்தர்ப்ப வாத, குறுகிய தேசியவாத சிங்கள அரசியல்வாதிகளால் உரத்துப் போடப்படும் வகுப்புவாதக் கூச்சல்களால் அவர்கள் தமது கருத்துக்களை வற்புறுத்திக் கூற முடியாது. உள்ளனர்.

சிங்கள தமிழ் மக்களிடையே உள்ள பிற்போக்கு வாதிகள் தமது வர்க்க நலன்களின் அடிப்படையில் ஒன்றுசேர முடியுமானல், இரு பகுயிலுமுள்ள புரட்சியாளர்களும் ஒன்று சேர முடியும், இதுதான் இன்று தேவைப்படும் உடனடிக் காரியமாகும்—புரட்சிகரத் தலைமையின் கீழ் சிங்கள, தமிழ் வெகு ஜனங்களின் ஒற்றுமையைக் கட்டி வளர்ப்பதாகும்.

ஜுலை மாதம் 16-ம், 17-ம் திகதிகளில்
அட்டன் நகரில்

இலங்கை வாலிப சங்க சம்மேளனத்தின்
செங்கொடி வாலிப சங்க

## மாநாடு

16-ந் தேதி பிரதிநிதிகள் மாநாடு
17-ம் திகதி காலை 9 மணிக்கு

## பொதுக்கூட்டமும்
## ஊர்வலமும்

பேச்சாளர்கள்: என். சண்முகதாசன்
எஸ். டி. பண்டாரநாயக்க எம். பீ.
ரொசாரியோ பெர்ணுண்டோ
ஹிக்கொட தர்மசேன
ஏ. ஆர். எட்மண்
கே. ஏ. சுப்பிரமணியம்
மற்றும் பலர்

செங்கொடி வாலிபர் சங்கம்
அட்டன்

மலைநாட்டுச் செங்கொடி வாலிபர் சங்க
மாநாட்டிற்கு
இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின்

# வாழ்த்துச் செய்தி

**16,** 17-ந் தேதிகளில் ஹட்டனில் நடைபெறும் மலைநாட்டுச் செங்கொடி வாலிபர் மாநாட்டிற்கு இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் ஏ. ஆர். எட்மண்ட் பின்வரும் வாழ்த்து செய்தியை அனுப்பியுள்ளார்.

உங்கள் வாலிபர் சங்கத்தின் மாநாடு நடைபெறும் இக்கால கட்டத்தில் உலகத்தின் எல்லா பாகங்களிலும் ஆயுதப் போராட்டங்களும் வளர்ந்து வருகின்றன.

இந்த முக்கிய காலகட்டத்தில் இலங்கை வாலிபர்களும் புரட்சிகர அணியில் வளர்ந்து வருவதைக் கண்டு அவர்களை வாழ்த்துகின்றோம்.

எமது இலங்கை வாலிபர்களும் கூட அந்தப் போராட்டங்களிலிருந்து அனுபவ பூர்வமான படிப்பினைகளைப் பெற்று ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களின் ஏவல் நாய்களுக்கும்—எதிராகவும், கேடுகெட்ட முதலாளித்துவ முறைகளுக்கு எதிராகவும் வீரமிக்க போராட்டங்களை நடத்த அணி திரளுமாறு அழைக்கின்றோம். எங்களுடைய முற்று முழுதான ஆதரவு உங்களுக்கு என்று முண்டு என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

◎ புரட்சிகர வாலிபர்கள் வாழ்க!

◎ மலைநாட்டு செங்கொடி வாலிபர் சங்கம் வாழ்க!

◎ முழு உலக வாலிபர்களின் ஆயுதப் போராட்டங்கள் வாழ்க!

◎ —10-ம் பக்கத் தொடர்

காட்டிக் கொடுத்துவிட்டார்கள். வேறு விதமாகக் கூறுவதானல் இவர்கள் இன்று தொழிலாள வர்க்கத்துக்கும், புரட்சிகர இயக்கங்களுக்கும் எதிரான சதிகாரர்களாக மாறிவிட்டார்கள். தொழிலாளர்களுக்கிடையிலுள்ள முதலாளித்துவ மனப்பான்மையை இவர்கள் கட்டிக் காத்து வருகின்ருர்கள். முதலாளித்துவப் பத்திரிகைகளும், பிற்போக்கு வாதிகளும் அவர்களை மார்க்சிஸ்ட் என்று கூறிக்கொண்டாலும் அவர்கள் மார்க்சிஸ்ட் அல்ல.

எங்கள் கட்சி பழைய கட்சியிலிருந்த எல்லா நன்மையான சரியான காரியங்களையும் முன்னெடுத்துச் செல்லுகின்றது. மா சே-துங்கின் சிந்தனைகளின் சரியான தலைமையின்கீழ் நாங்கள் இலங்கை புரட்சியின் முன்னணியாகத் திகழக்கூடிய சரியான, புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியை கட்டியெழுப்புவதில் முதன் முறையாக காலடி வைத்திருக்கின்றோம். நாங்கள் பங்கலோட்டுப் பாராளுமன்ற முறையை முற்று முழுதாக எதிர்க்கின்றோம். பாராளுமன்றம் என்பது வெகுஜனங்களை ஏமாற்றி முட்டாள்களாக்க ஆளும் வர்க்கத்தால் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என்பதையும், இதன்மூலம் ஆளும் வர்க்கம் உண்மையான அதிகாரம் ஆயுதப்படைகளிடம்தான் இருக்கின்றது என்ற உண்மையை மக்களிடமிருந்து மறைக்கின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றோம். இன்றைய காலகட்டத்தின் பெரும் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டான தோழர் மா சே-துங்கின் சிந்தனைகளைக் கற்று முன்னெடுத்துச் செல்லுமாறு நாம் மக்களை அழைக்கின்றோம்.

மார்க்சிஸ - லெனினிஸ, மாஓ சிந்தனைகளின் தவறற்ற தலைமையின்கீழ் முழு உலகத்திலும் ஒரு புரட்சிகர சூருவளி வீசிக் கொண்டிருக்கின்றது. சோஷலிஸம் இன்று உலகத்தின் எல்லா பாகங்களிலும் தன் இடத்தைப் பிடிக்கப் போகின்றது. இலங்கையில் நாங்கள் பின் தங்கிவிடாது ஒரு புரட்சிகர, சரியான கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி எழுப்புவோம். நவீன திரிபு வாதிகளதும் ட்ரொட்ஸ்கிய வாதிகளதும் சந்தர்ப்பவாத, எதிர்ப் புரட்சிகர அணியை எதிர்ப்போம். வெளிநாட்டு ஏகாதிபத்தியத்துக்குஎதிரான, காலனித்துவத்துக்கு எதிரான, யு.என்.பி. க்கும் அதன் ஏனைய எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கும் எதிரான எல்லா விதமான முற்போக்கு புரட்சிகர வெகுஜனங்களையும் சரியான அணியில் கட்டி எழுப்புவோம்.''

◎ 10-ம் பக்கத் தொடர்ச்சி,

முழு உலகத்திற்கும், வியட்நாமிலுள்ள புரட்சிகர சக்திகளுக்கும் தோல்வியாக மாற்ற எண்ணும் முயற்சியே ஆகும். வியட்நாமில் தனது குறிக்கோளை அடைய சோவியத் திரிபுவாதிகளின் ஒத்துழைப்புடன், அமெரிக்க ஏகாதிபத்தியம் இப் பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தும்.

எனினும் பேச்சுவார்த்தைக்கு அங்கே என்ன இருக்கிறது? பேச்சுவார்த்தைகள் என்ருல், கதைக்க இரு பகுதி உண்டு என்று பொருள். இது அப்படியல்ல. வியட்நாமிய மக்களின் சுய நிர்ணய உரிமை பேச்சுவார்த்தைக்குரியதல்ல. விரட்டியடித்தாலன்றி அமெரிக்கா வியட்நாமைவிட்டு வெளியேருது. பேச்சுவார்த்தைகள் இதை ஒருபோதும் கொண்டு வராது.

வடக்கிலே குண்டுவீச்சை நிறுத்துவதற்கு விலையாக தெற்கிலே உள்ள தமது தேசபக்தர்களுக்கு உதவி செய்வதை நிறுத்தும்படி வட வியட்நாமைக் கோர, அமெரிக்கப் பேச்சுவார்த்தைக் காரருக்கு வெட்கமில்லாமல் போயிற்று. இதற்குரிய பதிலை முன்னமேயே ஜனுதிபதி ஹோசிமின் அளித்துள்ளார். வியட்நாம் என்பது ஒன்று. வியட்நாம் மக்கள் என்பது ஒன்று. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக தென்னுட்டு மக்களால் தொடுக்கப்பட்ட தேசபக்தப் போராட்டத்திற்கு ஒரே தாய்நாட்டின் புதல்வர், புதல்வியர் என்ற முறையில் வடக்கில் உள்ள மக்கள் முழு ஆதரவும் கொடுப்பதற்கு கடமைப்பட்டுள்ளார்கள். இதேபோல் தாய்நாட்டின் வடபகுதியைக் காப்பதற்காக தங்கள் முழுச் சக்திகளுடனும் போராடித் தங்கள் பங்கைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஜெனிவா ஒப்பந்தத்தின் இன்னேர் ஆண்டு நிறைவைக் கொண்டாடும்போது, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தமது எல்லாத் துருப்புகளுடனும், தளங்களுடனும் வியட்நாமை விட்டு வெளியேறவேண்டும் என்றும், வியட்நாமிய ஜனநாயக குடியரசின் மீது குண்டுவீச்சை நிறுத்தும்படியும், வியட்நாமிய மக்களை அவர்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்க விடும்படியும் முழு உலகத்துடனும் சேர்ந்து கோருவோம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2